www.padippakam.com

பிப்.,மார்ச்'95 மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ் விலை:ரூ.3.50

# புதிய கலாச்சாரம்



இந்தச் சிறுமியை **விபச்சாரி** என்று அழைக்க உங்களால் முடியுமா?

முடியுமென்றால், ஒரே இரவில் நம் குழந்தைகள் கோடிக்கணக்கில் அந்நியச் செலாவணியைக் குவிக்க முடியும். சுற்றுலாப் பயணிகளாக வரும் அமெரிக்க, ஜப்பான், ஜெர்மன் காமவெறியர்களுக்குக் குழந்தைகள்தான் வேண்டுமாம். தாய்லாந்தில் 3 லட்சம் குழந்தைகளுக்கு எயிட்ஸ் நோயைக் கொடுத்தவர்கள் இப்போது நம் குழந்தைகளைக் கேட்கிறார்கள்... விற்கப்போகிறோமா?

படிப்பகம்

www.padippakam.com

சந்தடியின்றி, இலைமறைகாயாய் இருந்த எல்லா ஒழுக்கக் கேடுகளும் விளம்பரத்துடன் சந்தைக்கு வந்துவிட்டன. ''தப்பில்லை, உணர்ச்சிகளைக் கூவி விற்றாவது வாழ்ந்துவிடு,'' என்று உபதேசிக்கிறது சந்தைக் கலாச்சாரம். பாலியல், படுக்கையறை இரகசியங்களைக் காட்டுவதே இலக்கியத் துணிச்சல் என்று முண்டா தட்டுகிறார்கள் சரக்கு 'மாஸ்டர்கள்.' ஆனால் வாழ்க்கையே மறுக்கப்பட்ட பின்னும் உழைப்பை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு வாழத் துடிக்கும் ஒடுக்கப்பட்ட சனங்களின் ஒதுக்குப்புறமான இருப்பை உலகத்தின் பார்வைக்கு கதையாய் கொண்டு வந்திருக்கிறார் இமையம். சமூகத்தின் அழுக்கைச் சுமக்க நிர்பந்திக்கப்பட்ட சாதாரண சனங்களை, நம்மருகே நெருக்கமாக கொண்டு வந்து நிறுத்துகிறது ''கோவேறு கழுதைகள்.''

பதினேழு அத்தியாயங்களாக விரிந்து செல்கிறது கதை. கல்கியின் பொன்னியின் செல்வன் போன்றோ, ஆனந்தவிகடன் அறிமுகப்படுத்திய 'மடிசார்மாமியை'ப் போன்றோ இது வித்தியாசமான இலக்கிய விருந்தல்ல. தாழ்த்தப்பட்டவர்களுக்கு காலனியில் சேவைத் தொழில் புரியும் பறவண்ணார்களைப் பற்றியது கதை. காலனிக்குள்ளும் ஊருக்குள்ளும சகலவிதமான அவமதிப்புக்கும், சாதிய ஒடுக்கு முறைக்கும் உள்ளாகி குறுக்கும், நெடுக்கும் பொதிசுமக்கும் ஆரோக்கியம், சவுரி குடும்பத்தினரே மையமான கதாபாத்திரங்கள். கதையின் தலைமைப் பாத்திரம் ஆரோக்கியம். அவளது கணவன் சவுரி. இவர்களது குழந்தைகள் ஜோசப், மேரி, பீட்டர். இதில் ஆரோக்கியமும், சவுரியும் மூத்த தலைமுறையின் பிரதிநிதிகள். சகாயமேரியும் ஜோசப்பும், பீட்டரும், அடுத்தடுத்த தலைமுறைகளுக்கான குறியீடுகள்.

'ஏசுவே, கர்த்தரே' என்று சதா முனகிக் கொண்டு, சாமியார் (பாதிரியார்) மீதும் காலனி வீடுகள் மீதும் நம்பிக்கையோடு சேவை செய்து வருந்தி வாடும் ஆரோக்கியத்தின் அவலம் ஒருபுறம், இந்த இறுக்கமான சூழ்நிலைமைகளிலிருந்து விடுபட்டு வெளியேறத் துடிக்கும் சகாயமேரி, ஜோசப், பீட்டர் இவர்களின் தலைமுறை இடைவெளியும், வாழ்க்கைப் போராட்டமும் மறுபுறம். இவர்களைப் பலவாறாக அடிமைப்படுத்தி வேலை வாங்கும் காலனியும், ஊர் பழக்க வழக்கங்களும், மிரட்டி பணிய வைக்கும் பொருளாதாரமும் கதையின் ஊடாக தெரியவரும் செய்திகள்.

கதையின் தொடக்கமே சகலவிதமான உரிமைகளும் மறுக்கப்பட்ட பறவண்ணார்களின் வாழ்நிலையைத் தெளிவாகக் காட்டுகிறது. ஆரோக்கியமும், சவுரியும் குடும்பத்துடன் கோயிலுக்கு போவதற்குக் கூட ஊர்பெரியவர்களிடம் அனுமதி கேட்க வேண்டியிருக்கிறது.

''திடு திப்புனு குடும்பத்தோட ஊருக்குப் போறேங்குற எந்தவூரு ஞாயங்கறேன். நீ போற நேரம் பார்த்து ஊர்ல நல்லது கெட்டது நடந்தா யாரு பாக்றது? துணிய யாரு வெளுக்கறது?'' என்று காலனியில் எழும் கேள்விக்கு பதில் அளிக்க முடியாதபடி ஆரோக்கியத்தின் மேல் அடிமை வாழ்வு சுமத்தப்பட்டிருக்கிறது.

தன் பெயரோடு பிள்ளை, முதலியார், செட்டியார், கவுண்டர், என்பதை 'பெருமையாக' இணைத்துக் கூப்பிடும் சமூகம் சவுரியைக் கூப்பிடுவதோ, 'முண்டப்பயலே' என்றுதான். 'இன்னதற்குச் சொந்தக்காரன்' என்று சுட்டிக்காட்ட வக்கில்லாதவர்களுக்கு முகமெதற்கு, மரியாதை எதற்கு? தொரப்பாட்டுக் கல்லாய், 'ராச்சோறு' குண்டானாய் சீரழிந்து போனவர்களுக்கு பெயர் எதற்கு?



**கோவேறு கழுதைகள்:**

# உணர்ச்சி மரத்த சமூகத்திற்கு சூடு!

தனது தாய் இறந்துவிட்ட செய்தியைச் சொல்லி மேற்கொண்டு ஆக வேண்டிய காரியங்களுக்காக சவுரியை சாமத்தில் எழுப்பிப் போகும் காலனி ராமசாமி. வழிநெடுக வார்த்தைக்கு வார்த்தை 'முண்டப்பயலே முண்டப்பயலே' என விரட்டி வேலைகளைச் சொல்லும்போது, எவ்வித கசப்புணர்வையும் காட்டாமல் 'ஆவட்டும் சாமியோவ்' என தலையாட்டும் சவுரி நம்முன்னே பரிதாபமாகக் காட்சியளிக்கிறான். தன்னைச் சூத்திரன் எனச் சுட்டிக்காட்டும் பார்ப்பனிய ஒழுங்குகளை சுமக்கும் சமூகத்தின், சாதிப்படிநிலையின் நடமாடும் சாட்சி சவுரி.

இரந்துண்டு வாழும் - அவர்களின் அவலமான நிலையை, சோகத்தை ஓரிடத்தில் யதார்த்தமாகக் காட்டுகிறார் ஆசிரியர். பிணத்தின் மேல் கோடித்துணியை விரித்து ''வாக்கரிசி போடுங்க, பங்காளி உறவு மொற, சாதி சனம் எல்லாம் போடுங்க.'' என்று ஆரோக்கியமும், சவுரியும் கூட்டத்தைப் பார்த்துக் கூவும் போது இதயமுள்ள யாருக்கும் துடிக்கச் செய்யும். உலை வைத்து சோறு பொங்கி காக்கைக்கு வைத்துவிட்டுக் கை நனைக்கும் 'கவுரவமான' சமூகத்தில், வாக்கரிசிக்கு அடித்துக் கொள்ளும் ஆரோக்கியத்தின குரல் அழுகிப் போன சமூத்தின் குரலாய் ஒலிக்கிறது.

போதும் என்ற மனமே, பொன் செய்யும் மருந்து என்று கீழ்ப்பட்டவர்களுக்கு உபதேசித்துக் கொண்டே கிடைத்ததைச் சுருட்டும் உடைமையாளர்களுக்கு மத்தியில், வாழ்வின் அடிமட்டத்திற்கு தள்ளப்பட்ட சவுரி, பிணத்தைப் புதைக்கும் கடைசி நேரத்தில் ''நக கிக யதாச்சும் இருக்கானு பாருங்க சாமியோவ்'' என்று உறவுக்காரர்களைப் பார்த்துக் கேட்கும்போது, உழைப்பைத் தவிர வேறு வழியறியாத அடிமட்டத்து சனங்களின் அப்பாவித்தனம் வெளிப்படுகிறது.

பறவண்ணார்களின் அடிமைத்தொழில் துணிவெளுப்பதோடு நிற்கவில்லை. பிள்ளைப் பேறு பார்ப்பது, மார்பில் பால் கட்டியவர்களுக்கு மருத்துவச்சியாய் ஓடிச் சென்று மருத்துவம் பார்ப்பது, இழவு வீட்டில் காரியம் செய்வது, தை, மாசி காலங்களில் ஊர் சனங்களுக்கு களம் தூற்றித் தருவது என கிராமத்தின் அனைத்துக் காரியங்களிலும் பங்கேற்று உழைக்கும் அவர்களுக்கு ஊர் செய்யும் கைமாறு 'ராச்சோறு' 'வண்ணாத்தி மவ' 'முண்டப்பய' என இழிவாக அழைப்பது தான். இதனை ஒரு கேவலமாக அடுத்த தலைமுறை உணரத்தொடங்கி விட்டதை ஒரு இடத்தில் சிறப்பாக வெளிக்காட்டுகிறது கதை. ஊர்ப் பையன்கள் சோறு கொழம்பு விளையாட்டு விளையாடும் போது 'இது வண்ணாரப் பயலுக்கு' எனப் பங்கு வைக்கும் போது சிறுவன் பீட்டருக்கு வரும் ஆத்திரத்தின் வாயிலாக இது இயல்பாகப் படைக்கப்பட்டுள்ளது.

முன்னைப் போல ஊரில் ராச்சோறும், பிழைப்பும் இல்லாவிட்டாலும் வயதான காலத்தில் தனது தொரப்பாட்டை விட்டு நகரமறுக்கும் ஆரோக்கியம், பழைய நினைவுகளை ஒப்பிட்டுப்


(தொடர்ச்சி 23-ம் பக்கம்)
படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

● போர்: 12
● குரல்: 9-10
● பிப்-மார்ச்'95

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.50
ஆண்டு சந்தா: ரூ. 42.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9

படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்
இரா.சீனிவாசன்,
3, நாலவது தெரு,
செகந்நாதபுரம்,
சேத்துப்பட்டு,
சென்னை-600 031.

# இந்தியப் பாதை!

இரண்டு மாநிலங்களில் காங்கிரசு அடைந்த படுதோல்வி, அந்தக் கட்சிக்குள் மட்டுமின்றி, மற்ற ஓட்டுக் கட்சிகள் மத்தியிலும், தாராளமயமாக்கல் கொள்கையின் பீதியையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளன. தாராளமயமாக்கலின் 'தவிர்க்க வியாலமையைப் புரிந்து கொள்ளும் தொலை நோக்கோ', புல்லுக்கும் பொசியும் வரை காத்திருக்கும் பொறுமையோ இல்லாத மக்கள் கூட்டம், பசி, வறுமை, வேலையின்மை, விலைவாசி உயர்வு, போன்ற 'அற்பமான உடனடி நலன்களை' முன்னிறுத்தி வாக்களித்திருப்பதை இவர்கள் கவனிக்கத் தவறவில்லை.

கவர்ச்சித் திட்டங்கள், மானியங்கள், அரசுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு எதிராக மன்மோகன்சிங் போர்ப் பிரகடனம் செய்தபோது, அவரது துணிச்சலை பாராட்டியும், அவரது குரலில் ராஜாஜியின் குரலைக் கேட்பதாகப் பூரித்தும் எழுதிய பத்திரிகைகள் இன்று அவருக்குப் புத்திமதி சொல்கின்றன. பொதுத் தேர்தலுக்கு இன்னும் ஓராண்டே இருக்கின்ற நிலையில், தாராளமயமாக்கல் கொள்கையின் நம்பிக்கை நட்சத்திரமான காங்கிரசு உதிர்ந்து விடுமோ என அஞ்சி, ''காடு, மலை மட்டுமல்ல மக்களும் சேர்ந்தது தான் நாடு'' என்று தனக்குத் தோன்றியிருக்கும் ஞானோதயத்தை நரசிம்மராவுடன் பகிர்ந்து கொள்கிறது தினமணி.

ஆந்திர கர்நாடகத் தேர்தல் முடிவுகளிலிருந்து பாடம் கற்றுக் கொண்ட ஒட்டுக்கட்சிகளோ, இரண்டு ரூபாய் அரிசி, ஒரு ரூபாய் ரொட்டி, இலவச சீருடை, இலவச பஸ் பாஸ் என்று கவர்ச்சித் திட்டங்களை அதன் எல்லைக்கே கொண்டு செல்கின்றன. ''ராவ் கடன் வாங்கித் தரலாம் - யார் ஒட்டு வாங்கித் தருவார்கள்?'' என்கிறார் ஒரு காங்கிரசு எம்.பி.''. ஆலை அதிபர்கள் 80,000 கோடி கடன் பாக்கி வைத்துள்ளனர். மத்திய அரசு 12,000 கோடி அவர்களுக்குத் தள்ளுபடி செய்துள்ளது. நான் விவசாயிக்கு 130 கோடி கடனைத் தள்ளுபடி செய்தது குற்றமா?'' என முழங்குகிறார் தேவ கவுடா. இந்த வீரவசனங்களில் கிறங்கி 'முற்போக்கு முன்னணி' அமைக்கும் தனது பாரம்பரியமான தொழிலில் இறங்கி விட்டது மார்க்சிஸ்டு கட்சி.

பொதுவாகப் பார்த்தால் இவை ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்கு முன்னும் அரங்கேறிய பழைய நாடகங்கள் - வசனங்கள்தான். ஆனால் உலக வர்த்தகக் கழகத்தின் ஆட்சி நிறுவப்பட்டிருக்கும் இன்றைய புதிய சூழ்நிலையில், வடிவத்தில் பழையதைப் போலத் தோன்றும் இந்த வசனங்களுக்கு புதிய உள்ளடக்கம் சேர்ந்திருக்கிறது. கலப்புப் பொருளாதாரத்தின் தோல்வி, அரசியல் நிறுவனங்களின் சீரழிவு ஆகியவற்றின் விளைவாகத் தோன்றி, 70-களிலிருந்து ஒரு போக்காக வளர்ச்சியடைந்த கவர்ச்சிவாதம், இன்று நானின்றி நீ இல்லை'' என 'பாராளுமன்ற ஜனநாயக அரசியலை' மிரட்டுகிறது. இன்னொரு புறம் இலவச, கவர்ச்சித் திட்டங்கள் எதுவுமே கூடாதென உலக வர்த்தகக் கழகம் மிரட்டுகிறது.

இந்திய ஆளும் வர்க்க அறிவாளிகள் ஒரு புதிய பாதை போட விரும்புகின்றனர். நாடுகளின் இறையாண்மையை மறுக்கும் உலக வர்த்தகக் கழகத்துக்கு அடி பணிய வேண்டும். உள்நாட்டில் போலி ஜனநாயகமும் நீடிக்க வேண்டும்; மறுசீரமைப்பு உத்தரவுகளுக்குக் கட்டுப்பட வேண்டும், இலவசத் திட்டமும் அறிவிக்க வேண்டும்; செயற்கைக் கோள் தொலைக்காட்சிக்கு சுதந்திரம் வேண்டும் கலாச்சாரச் சீரழிவையும் கட்டுக்குள் வைக்க வேண்டும். மணி சங்கர் அய்யரின் வார்த்தைகளில் சொன்னால் ''ஒரே பொருளாதாரச் சீர்திருத்தம் பணக்காரன் ஏழை இரண்டு தரப்புக்கும் பயனளிக்க வேண்டும்''. எல்லா வர்க்கங்களுக்கும் பொதுவான தந்தை வழிப் பரோபகாரியாக நடிக்க முனைந்த பிரான்சின் மூன்றாவது நெப்போலியனை ஒரு வர்க்கத்திடமிருந்து எடுக்காமல் இன்னொரு வர்க்கத்துக்கு கொடுக்க முடியாது'' என்று கேலி செய்தார் மார்க்ஸ்.

இது ஆளும் வர்க்க அறிவாளிகளுக்கும் புரியமாலில்லை. எடுப்பது தெரியாமல் எடுக்கும் இந்திய மரபைப் பின்பற்றுமாறு தான் அவர்கள் ஆலோசனை கூறுகிறார்கள். வருண - சாதி படி நிலைச் சமூக அமைப்பில் இரண்டாயிரம் ஆண்டுகளாகக் கையேந்தி நிற்க வைக்கப்பட்ட மக்களுக்கு, அந்த மரபின் வழியிலேயே கவர்ச்சித்திட்டங்களைத் தொடர்வதன் மூலம் அதிர்ச்சியோ, கொந்தளிப்போ இல்லாமல் அதிகாரத்தை உலக வர்த்தகக் கழகத்திடம் சுமுகமாக மாற்றிக் கொடுக்கலாம் என்று கூறுகிறார்கள். அரை வயிற்றுக் கஞ்சியை ஊற்றிவிட்டால் அரசன் 60,000 வைப்பாட்டி வைத்துக் கொண்டாலும் மக்கள் கவலைப்பட மாட்டார்கள் என்ற தங்கள் அனுபவத்தைக் கூறுகிறார்கள். சோமாலியாவைப் போல உடனடியாக அல்ல, மெதுவான மரணம்; லத்தீன் அமெரிக்காவைப் போல ராணுவ சர்வாதிகாரம் அல்ல போலி ஜனநாயக முகமூடி அணிந்த பாசிச சர்வாதிகாரம். தாராளமயமும் வேண்டும் கவர்ச்சித் திட்டங்களும் வேண்டும் என்ற கொள்கையை முன் வைக்கும் போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட அனைவரது வாதங்களின் சாரமும் இதுதான்.

மக்கள் கோடி ரூபாயா கேட்டார்கள்? சோறு தானே கேட்டார்கள் என்கிறார் பா.ஜ. கட்சியின் பொருளாதார வல்லுநர் ஜெய் துபாஷி, ''சோற்றைப் போட்டு விட்டு எவ்வளவு கோடியையும் கொண்டு போ. யார் கேட்கப் போகிறார்கள்?'' என்பதே இதன் பொழிப்புரை. ராவ் அரசுக்கு மட்டுமல்ல, திரிபுவனச் சக்கரவர்த்தியான அமெரிக்காவுக்கு இந்திய சமஸ்தானத்தின் மந்திரிகள் வழங்கும் ஆலோசனை இது.

படிப்பகம்

www.padippakam.com



## விபச்சாரத்தில் குழந்தைகள்

# பிஞ்சுகளைக் குதறும் சீமைப்பன்றிகள்

லினா பெர்னெட் என்ற ஸ்வீடன் நாட்டு நடிகையும் அவளது காதலனும் போதை மருந்துக் கடத்தல் குற்றத்துக்காக கோவாவில் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீதான வழக்கு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட போது அதிர்ச்சியூட்டும் பல புதிய செய்திகள் வெளிவரத் தொடங்கின.

கோவாவில் அநாதைச் சிறுவர்களுக்கான 'ஆசிரமம்' நடத்தும் ஃபிரெட்டி பீட் என்பவனை இவ்வழக்குத் தொடர்பாக காவல்துறையினர் சோதனையிட்டபோது இந்தியச் சிறுவர்கள் பலருடன் அவன் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவதைச் சித்தரிக்கும் புகைப்படங்கள் நூற்றுக் கணக்கில் சிக்கின.

வாடிக்கையாளர்களைக் கவர்வதற்கான சாம்பிள்களாகவும், கோவாவுக்கு சுற்றுலா வருமாறு அவர்களைக் கூப்பிடும் அழைப்பிதழ்களாகவும் அவை பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. நூற்றுக் கணக்கான அத்தகைய புகைப் படங்களை ஜெர்மனி மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு அவன் அனுப்பி வைத்திருந்ததும் தெரிய வந்தது. விபச்சார விடுதிகளாக அவன் பயன்படுத்தி வந்த இரு இடங்களும் கண்டு பிடிக்கப்பட்டன.

''குழந்தை விபச்சாரத்தின் சொர்க்கம் என்று கூறப்படும் தாய்லாந்தில் சமீபகாலத்தில் அரசுக் கெடுபிடிகள் அதிகமாகி விட்டதால் பொருத்தமான பாதுகாப்பான வேறொரு இடத்தை தெற்காசியப் பகுதியில் தெரிவு செய்ய வேண்டிய நெருக்கடி இந்தச் சுற்றுலாத் தொழில் அதிபர்களுக்கு ஏற்பட்டுள்ளது. கோவா அதற்குப் பொருத்தமான இடம். பெண்களையும், சிறுவர் சிறுமிகளையும் இந்த வட்டாரத்தில் கொண்டு வந்து குவிக்க அவர்கள் திட்டமிட்டுள்ளனர்'' என்று கூறுகிறது இன்டர்போல் என்ற சர்வதேசக் காவல் துறை.

இது இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேட்டில் சமீபத்தில் வெளியான சிறியதொரு செய்தித் துணுக்கு. போபர்ஸ் பீரங்கி பேர ஊழல் குறித்த செய்தியும் முதன் முதலில் வெளி வந்த போது செய்தித்தாளில் இரண்டங்குல அகலம் நாலங்குல உயரம்தான் இருந்தது.

வியட்நாமை ஆக்கிரமித்திருந்த அமெரிக்க ராணுவச் சிப்பாய்கள் ஓய்வெடுப்பதற்கும், பொழுது போக்குவதற்கும் தாய்லாந்தைப் பயன்படுத்திக் கொள்ளும் ஒப்பந்தம் 1967-இல் அமெரிக்காவுடன் கையெழுத்தானபோது அதன் விபரீதத்தைத் தாய்லாந்து மக்கள் பலர் அறிந்திருக்கவில்லை.

1971-இல் உலக வங்கித் தலைவர் மெக்னமாராவின் ஆணைப்படி உலக வங்கி உதவியுடன் சுற்றுலா வளர்ச்சித் திட்டங்கள் நாடெங்கும் அறிவிக்கப்பட்ட போதும் விசயம் இன்னதென்று தாய்லாந்து மக்கள் புரிந்து கொள்ளவில்லை.

1975-இல் ''பொழுது போக்கு வளாகங்கள் சட்டம்'' என்றொரு புதிய சட்டத்தைத் தாய்லாந்து அரசு கொண்டு வந்த போது, அச்சட்டத்தில் சிறப்புச் சேவைகள் என்ற பெயரில் மசாஜ் விடுதிகளுக்கும், கேளிக்கை என்ற பெயரில் ஆடை அவிழ்ப்பு நடனங்களுக்கும் அனுமதி அளிக்கப்பட்டிருந்ததைப் பார்த்த போதுதான் சதித்திட்டம் பல பேருக்குப் புரியத் தொடங்கியது.

ஆனால் அதற்குள் காலம் கடந்துவிட்டது. அந்த எட்டு ஆண்டுகளுக்குள் நாடெங்கும் 20,000 புதிய விபச்சார விடுதிகள் தோன்றிவிட்டன. அமெரிக்க ஐரோப்பிய யாத்ரீகர்களின் விபச்சாரத் திருத்தலமாக தாய்லாந்து மாற்றப்பட்டு விட்டது.

மக்களின் வறுமையும், நாட்டின் அந்நியக் கடன் சுமையும் அதிகரிக்க அதிகரிக்க, அதே வேகத்தில் விபச்சாரமும் அதிகரிக்கத் தொடங்கியது.

இன்று விபச்சாரத்திற்கு விரட்டப்பட்டிருக்கும் 12 வயதுக்குட்பட்ட தாய்லாந்து நாட்டுச் சிறுவர்கள் மற்றும் சிறுமிகளின் எண்ணிக்கை 6 லட்சம். 18 வயதுக் குட்பட்டவர்கள் என்று பார்த்தால் 20 லட்சம். சுமார் 5 அல்லது 6 கோடி ஜனத் தொகை கொண்ட ஒரு நாட்டில் 18 வயதுக்குட்பட்டோரின் எண்ணிக்கை 2 கோடி என்று வைத்தாலும் விபச்சாரத்தில் ஈடுபட்டிருப்போர் அதில் 10 சதவீதம் பேர்.

தாய்லாந்தின் வடபகுதி எல்லையோரம் உள்ள கிராமங்களனைத்தையும் நேரில் பார்த்த ஒரு அமெரிக்க நிருபர் எந்தக் கிராமத்திலும் சிறுமிகளையே பார்க்க முடியவில்லை என்கிறார். தாய்லாந்தின் வடபகுதியிலிருந்த அடர்ந்த காடுகளை வெட்டி ஏற்றுமதி செய்து அப்பகுதியைப் பொட்டலாக்கி விட்டது அரசு. பாரம்பரியமாக காடுகளைச் சார்ந்து வாழ்க்கை நடத்தி வந்த கிராமப்புற மக்கள் தங்கள் வயிற்றுப் பாட்டுக்காகப் பெண் பிள்ளைகளை விற்றுவிடுவது சகஜமாகி விட்டது.

தாய்லாந்தில் ஒரு சிறுமியின் விலை 8000 டாலர்கள். ஜப்பானில் உள்ள விபச்சார விடுதிகளுக்கு 14,000 டாலர்களுக்கு அவர்கள் விற்கப் படுகிறார்கள். அந்தத் தொகை அப்படியே இரட்டிப்பாக்கப்பட்டு 30,000 டாலர் திரும்பக் கட்டினால்தான் விடுதலை என்று அச்சிறுமிகளை விடுதிக்குள்ளேயே சிறை வைத்திருக்கின்றனர், விபச்சார விடுதிகளை நடத்தும் மாஃபியா குண்டர்கள்.

''இன்னொரு பிறவியே எடுத்தாலும் இந்தத் தொகையை அடைக்க முடியாது; பாலியல் வன்முறையையும் சகிக்க முடியாது'' என்ற நிலைமையில் சித்திரவதைக்கும் சாவுக்கும் அஞ்சாமல் விடுதியை விட்டுத்தப்பி ஓடிவந்து



சில வாடிக்கையாளர்களின் ரசனைக்கேற்ப மாரிக் என்ற சிறுவனுக்கு பெண் வேடம் போட்டு அனுப்புகிறான் ஒரு தரகன். நடக்குமிடம்-யெல்சினின் மாஸ்கோ.



படிப்பகம்

www.padippakam.com

தாய்லாந்து தூதரகத்தில் சரணடைகின்றனர் நூற்றுக்கணக்கான சிறுமிகள். இப்படி ஒவ்வொரு மாதமும் தாய்லாந்துக்குத் திருப்பி அனுப்பப்படும் தப்பி வந்த சிறுமிகளின் எண்ணிக்கை 250.

கிராமங்களிலிருந்து விலைக்கு வாங்கப் பட்டு இவ்வாறு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவோர் போக மற்ற சிறுமிகள் தலைநகர் பாங்காக்கில் உள்ள விபச்சார விடுதிகளுக்கு விற்கப்படுகின்றனர். அந்நியச் செலாவணியை அள்ளித் தருகின்ற அமெரிக்கர்களும், ஜப்பானியர்களும், ஜெர்மானியர்களும்தான், இங்கே பிரதன வாடிக்கையாளர்கள்.

''தாய்லாந்திற்கே உரிய கதகதப்பை வழங்கும் குட்டி அடிமைகள்'', ''சொன்னபடியெல்லாம் கேட்டு நடக்கும் பெண் பிஞ்சுகள்'' என்று வக்கிரமாகவும் பச்சையாகவும் விளம்பரம் செய்து காமவெறி பிடித்த வாடிக்கையாளர்களைக் கவர்கின்றன ''ஐரோப்பிய செக்ஸ் சுற்றுலா நிறுவனங்கள்''. ஒரு இளம் பெண்ணை மேற்சட்டை இல்லாமல் புகைப்படம் எடுத்து அப்படத்தைக் காதல் சின்னத்துக்குள் பொருத்தி தாய்லாந்திலிருந்து காதலுடன்'' என்று அச்சிட்டு விமானப் பயணிகளுக்கு விநியோகிக்கிறது இன்னொரு நிறுவனம். உலகின் எந்தெந்த நாடுகளில், எங்கெங்கே ஓரினச் சேர்க்கைக்கான ஆண்/பெண்கள் கிடைக்கின்றனர் என்ற பட்டியலை ஜெர்மனி ஓரினச் சேர்க்கையாளர் அமைப்பு நடத்தும் பத்திரிகையில் பல மொழிகளில் வெளிவருகிறது.

''பருவமடைந்த விலைமாதர்களுடன் உறவு கொண்டால் 'எயிட்ஸ்' அபாயம் - சிறுமிகள் என்றால் அந்தப் பிரச்சினை இல்லை'' என்று பொய்ப் பிரச்சாரம் செய்யப்பட்டுள்ளதால் வெள்ளைக் காமவெறியர்களின் பார்வை முழுவதும் சிறுமிகளின் மீது திரும்பி விட்டது. பருவம் வராத நிலையில் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்படும் 8 முதல் 12 வயதுக்குட்பட்ட சிறுமிகள் கடுமையான இரத்தப் போக்கிற்கு ஆளாகின்றனர். அதனூடாகவே வாடிக்கையாளர்களைத் திருப்திப் படுத்தும்படி அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.
விளைவு 6 லட்சம் சிறுமிகளில் பாதிப்பேர் எயிட்ஸ் நோயாளிகளாகியுள்ளனர்.

நோயாளிகள் எனத் தெரிந்ததும் அச் சிறுமிகள் சொந்தக் கிராமத்துக்கே விரட்டிவிடப் படுகின்றனர். எயிட்ஸின் தாக்குதலுக்கு ஆளாகாமல் இருந்த கிராமப்புறங்களிலும் இதன் காரணமாக எயிட்ஸ் பரவி விட்டது.

பெண்ணுரிமை அமைப்புகளும், குழந்தைகள் நல அமைப்புகளும் இந்தக் கொடுமைக்கெதிராகப் போட்ட கூச்சலை நேற்றுவரை எந்த ஐரோப்பிய, அமெரிக்கக் கனவானும் காதில் வாங்கவில்லை. ஆனால் இன்று தங்கள் குரலில் ஆச்சரியம் தொனிக்க, அப்படியா, தாய்லாந்தில் சிறுமிகளா விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்? எவ்வளவு பேர் இருப்பார்கள்?'' என்று ஒண்ணுமே தெரியாதவர்கள் போலக் கேட்கிறார்கள்.

> 'குழந்தை விபச்சாரத்தின்' சொர்க்கமான தாய்லாந்தில் 3 லட்சம் குழந்தைகளுக்கு எயிட்ஸ்; அரசுக் கெடுபிடி அதிகரித்துவிட்டது. எனவே தாய்லாந்துக்கு மாற்றாக கோவாவைத் தெரிவு செய்துள்ளனர் சுற்றுலாத் தொழில் அதிபர்கள் - என்கிறது 'இன்டர்போல்'.

இன்று அவர்கள் கேட்பதற்குக் காரணமும் தாய்லாந்து குழந்தைகள் மீதுள்ள அனுதாபம் அல்ல. விளையாடப் போன தங்கள் அருமைக் குடிமக்கள் எயிட்ஸை வாங்கி வந்து விட்டார்களே என்ற வருத்தம் தான்; புதிதாக ஏதேனும் ஒரு பாதுகாப்பான நாட்டை ஏற்பாடு செய்ய வேண்டுமே என்ற கவலைதான்.

ஆர்மைன் என்ற தாய்லாந்துச் சிறுமி விபச்சாரத்தில் தள்ளப்படும்போது அவளுக்கு வயது 12. பருவத்திற்குக் கூட வரவில்லை. கடற்கரையோர உணவு விடுதியில் நல்ல வேலை வாங்கித் தருகிறோம் என்று பொய் சொல்லி அவளது ஏழைப் பெற்றோரை ஏமாற்றி விபச்சாரத்திற்குப் பேர் போன புக்கேட் நகரில் கொண்டு வந்து விற்றுவிட்டார்கள் விபச்சாரத் தரகர்கள்.

''ஒரு இரவுக்குக் குறைந்தது 3 பேர். எல்லோரும் அமெரிக்கர்கள், ஜப்பானியர்கள், ஐரோப்பியர்கள் தான்.'' என்கிறாள் ஆர்மைன். இரண்டு ஆண்டுகள் இந்த நரகத்தில் உழன்றபின் அவளை விடுவித்தது காவல்துறை. ஆனால் அதற்குள் அவள் எயிட்ஸ் நோயாளியாகி விட்டாள்.

> ''ஒரு இரவுக்குக் குறைந்தது 3 பேர். எல்லோரும் அமெரிக்கர்கள், ஜப்பானியர்கள், ஐரோப்பியர்கள்தான்'' என்கிறாள் ஆர்மைன். பருவத்திற்கு வராத 12 வயது தாய்லாந்து சிறுமி இவள். 14 வயதில் விடுவிக்கப்பட்டபோது இவள் ஒரு எயிட்ஸ் நோயாளி.

இந்தியாவில் 4 லட்சம் சிறுவர் - சிறுமிகள்; பிலிப்பைன்சில் 60,000 பேர்; பிரேசிலில் 2.5 லட்சம் பேர். அநேகமாக எல்லா ஏழை நாடுகளும், முன்னாள் சோசலிச நாடுகளும் ஐரோப்பிய அமெரிக்க காமவெறியர்களின் விருந்தினர்களாகி விட்டனர்.

இலங்கைத் தேயிலை அலுத்துப் போய் இப்போது பால் மணம் மாறாச் சிறுவர்களைக் கேட்கிறார்கள், மேல் நாட்டுச் சுற்றுலாப் பயணிகள். இவர்களது ஓரினச் சேர்க்கைக்குப் பலியாக்கப் பட்டு வரும் சிறுவர்களின் எண்ணிக்கை 40,000.

தனியார் மருத்துவமனைகளைச் சுற்றிலும் மருந்துக் கடைகள் பெருத்திருப்பது வழக்கம். ஆனால் பம்பாயின் சில நட்சத்திர மருத்துவமனைகளைச் சுற்றி விபச்சார விடுதிகள் ஏராளமாக முளைத்திருக்கின்றன. அந்நியச் செலவாணியைக் குறிவைத்தே துவக்கப்பட்டிருக்கும் இந்த மருத்துவமனைகளில் தலைவலி, காய்ச்சல என்று ஏதேனும் ஒரு சாக்கைச் சொல்லி நோயாளியாகச் சேர்ந்துவிடும் அரேபிய ஷேக்குகள் தங்களுக்குத் தேவையான சிறுமிகளை பாதுகாப்பாக அங்கே வரவழைத்துக் கொள்கிறார்கள்.

வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று நம்பி ஏமாந்து விபச்சாரத்தில் தள்ளப்பட்ட டொமினிகன் குடியரசைச் சேர்ந்த ஒரு இளம் பெண்ணின் பேட்டியை பி.பி.சி தொலைக்காட்சி ஒளிபரப்பியது. அவர்கள் என்னை அடித்தார்கள், சூடு வைத்தார்கள், பட்டினி போட்டார்கள். 5 நாட்களுக்கு மேல் என்னால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. கடைசியில் என் தன்மானத்தையும், கன்னிமையையும் வெறும் 25 டாலருக்கு இழந்தேன்'' என்று கண்களில் நீர் வழியக் கூறினாள் அந்தப் பெண்.

தங்கள் நாட்டின் இறையாண்மையையும் மானத்தையும் சில லட்சம் டாலர்களுக்கு அமெரிக்காவுக்கும் உலகவங்கிக்கும் விற்றுவிட்ட நாடுகளின் பெண்களெல்லாம் தங்கள் மானத்தை ஒன்றிரண்டு டாலர்களுக்கு விற்க நேர்வது தவிர்க்க முடியாது.

பிரேசில், மெக்சிக்கோ, பிலிப்பைன்சு, தாய்லாந்து... அடுத்து இந்தியா.

''நமது மரபென்ன, பண்பாடென்ன, வரலாறென்ன! வயிற்றுப் பசிக்காகப் பெற்ற பிள்ளையையே விற்கத் துணியும் தாய்லாந்து விவசாயியைப் போல நம் நாட்டு மக்கள் ஒருக்காலும் நடந்து கொள்ள மாட்டார்கள்.'' என்று யாரும் ஆறுத



படிப்பகம்

www.padippakam.com

லடைந்து கொள்ள வேண்டாம்.

'பசி வந்திடப் பத்தும் பறந்துபோகும்' என்பது தமிழ்ப் பழமொழியல்ல, உலகப் பொதுமொழி. வயிற்றுக்காக சிறுநீரகத்தை உயிரை பணயம் வைக்கத் தூண்டும் ஏழ்மை, சிறுவர்களை மட்டும் விட்டு வைக்குமா? மீட்க முடியாது என்று தெரிந்தே சொந்தப் பிள்ளையைக் கொத்தடிமையாக விற்கத் தூண்டும் வறுமை, அத்துடன் நிறுத்திக் கொண்டு விடுமா? உலகின் ஒரே இந்து நாடான நேபாளத்திலிருந்து சிறுமிகளும், பெண்களுமாக ஆண்டுக்கு [illegible] பேர் பம்பாய் சிவப்பு விளக்குப் பகுதிக்கு இறக்குமதியாகிறார்களே எப்படி?

நேபாளத்திலிருந்து கடத்திக் கொண்டு வரப்பட்ட ஒரு 14 வயதுச் சிறுமியை பம்பாய் விபச்சார விடுதியொன்றில் வைத்து 3 வார சித்திரவதை செய்தார்கள். அவள் எதிர்த்து நின்றாள். பிறகு ஒரு இருட்டறையில் அவளை ஒரு நல்ல பாம்புடன் சேர்த்து அடைத்தார்கள். அச்சத்தில் உறைந்து போனாள். இரண்டு நாட்கள் கழிந்தன. மூன்றாம் நாள் இணங்கினாள்.

தாய்லாந்தின் ஈவிரக்கமற்ற விபச்சாரத் தரகர்களைப் போல 8 வயதுக் குழந்தையைக் கொண்டு வந்து விபச்சாரியாக்குவது நம் நாட்டிலும் நடக்குமா என்ற ஐயம் யாருக்கும் இருக்க வாய்ப்பில்லை. ஏற்கனவே அது நடந்து கொண்டுதானிருக்கிறது. சிறுநீரகத் திருட்டின் தரகர்கள் வேறெந்த ரகம்?

மண்ணையும் மக்களையும அந்நியனுக்குக் கூட்டிக் கொடுக்கும் தரகர்கள் ஆளும் நாட்டில் பெண்ணையும் குழந்தைகளையும் அவனுடைய படுக்கையறைக்கு விற்கும் தரகர்களா இல்லாமல் போய்விடுவார்கள்?

"அது ஒன்றும் கஷ்டமில்லை ருமேனியாவுக்குப் போனேன். கேட்பாரில்லாத பெண்கள் யாரென்று தேடினேன். அவர்களை அழைத்து வந்து பெல்ஜியத்தில் விற்றுவிட்டேன். பிறகு அவர்கள் பல கை மாறி விற்கப் பட்டார்கள். எனினும் கேட்பதற்கு ஒரு நாதியும் கிடையாது. தொழில் ரொம்பச் சுலபம் - ஒரு கிலோ ரொட்டியை விற்பது போலத்தான்", என்று தொலைக்காட்சிக்குப் பேட்டிகொடுத்தான் ஒரு ஹங்கேரிய விபச்சாரத் தரகன். முதலாளித்துவம் வெற்றிக் கொடி நாட்டிய நாடல்லவா!

"ஒன்று மதம் இன்னொன்று போலீசு இவையிரண்டும்தான் விபச்சாரத்தை ஒழிப்பதற்கு அவர்கள் வைத்திருக்கும் ஆயுதங்கள்" என்று முதலாளித்துவத்தைக் கேலி செய்தார் லெனின். ஆனால் ஏட்டளவில் விபச்சார ஒழிப்பு பற்றிப் பேசிய காலம்கூட இன்று ஒழிந்து விட்டது.

அட்டையில்: வேலைவாய்ப்பு ஆசை காட்டி பம்பாய் விபச்சார விடுதிக்கு விற்கப் பட்ட 13 வயதே நிரம்பிய தமிழ்நாட்டுச் சிறுமி சாந்தி - இன்று எய்ட்ஸ் நோயாளி.

"குழந்தை உழைப்பைத் தடை செய்வோம்" என்று முழங்கிவிட்டு இன்று குழந்தைத் தொழிலாளர் நல சட்டம் கொண்டு வந்து அதையே ஊக்கப்படுத்தி ஒழுங்கு படுத்துவது போல,

விபச்சாரத்திற்கும் ஒரு வழிகண்டு பிடித்து விட்டார்கள். 'விலைமாதர்கள்' என்ற சொல் அவர்களை இழிவுபடுத்துவதுதால் (நன்றாக கவனியுங்கள். அந்த தொழில் அல்ல, சொல்தான் அவர்களை இழிவு படுத்துகிறதாம்.) **பாலியல் தொழிலாளர்கள்** என்ற புதிய 'கவுரவமான சொல்லை அறிமுகப்படுத்தியிருக்கின்றன முதலாளித்துவப் பத்திரிகைகள்.

சிவகாசி, மத்தாப்பூவுக்குக் குழந்தைகள் 'தவிர்க்கவியலாத' தேவையாகி

> பிரேசில், மெக்சிகோ, பிலிப்பைன்சு, தாய்லாந்து... இந்தியா. தங்கள் நாட்டின் மானத்தைச் சில லட்சம் டாலர்களுக்கு அமெரிக்காவிடம் விலைபேசிவிட்ட நாடுகளின் பெண்கள், தமது மானத்தை ஒன்றிரண்டு டாலர்களுக்கு விற்க நேர்வது தவிர்க்க முடியாதது.

விட்டதைப் போல, நாளை சுற்றுலா வளர்ச்சிக்கும் அந்நியச் செலாவணி வரு வாய்க்கும் குழந்தைகள் தவிர்க்கவியலாதவர்கள் ஆகலாம். "பருவம் வராத பாலியல் தொழிலாளர்கள்" என்றொரு புனிதப் பெயர் சூட்டி இதையும் இந்த அரசு நிறுவனமயமாக்கிவிடலாம்.

பாலுறவு என்றால் என்னவென்றே தெரியாத, அதற்குரிய பருவமும் வராத சிறுவர்களும், சிறுமிகளும் விபச்சாரத்திற்கு உட்படுத்தப்படுவதன் சமூக விளைவுகள் என்ன? சில ஆண்டுகள் இத்தகைய பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப் பட்டபின் ஒருவேளை அவர்கள் விடுவிக்கப்பட்டாலும் அவர்கள் மனநிலை என்னவாக இருக்கும்? வாழ்க்கை மதிப்பீடுகள் என்னவாக இருக்கும்?

"திரும்பவும் எங்கள் நாட்டுக்குப் போய் என்ன செய்வது? குடும்பத்தோடு பட்டினி கிடப்பதா? ஆணாயிருந்தால் எவனையாவது கொலை செய்துவிட்டுப் பணம் திருடியிருப்பேன். பெண் என்பதால் விபச்சாரியாகிவிட்டேன்" என்றாள் பம்பாய் விடுதியொன்றிலிருந்து மீட்கப் பட்ட ஒரு நேபாளப் பெண்.

விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அமெரிக்க சிறார்களில் கணிசமானோர் அவ்வப்போதைய கைச் செலவுக்காக 'தொழிலில்' ஈடுபடுபவர்கள் என்கிறது ஒரு அமெரிக்க ஆய்வு. இங்கே பெரு நகர்ப் புறங்களில் ஏற்கனவே தோன்றிவிட்டது இந்தப் பண்பாடு.

பம்பாய் விபச்சார விடுதிகளிலிருந்து தமிழ்நாட்டுக்கு மீட்டுக் கொண்டு வரப்பட்ட பெண்களில் சிலர் திரும்பவும் அங்கேயே சென்றுவிட விரும்பினர். காரணம்? "இந்த நரகத்திற்கு அந்த நரகமே மேல்" என்பதுதான் அவர்களது பதில்.

**தா**ய்லாந்தின் மரமும், இலங்கையின் தேயிலையும், வங்காளதேசத்தின் சணலும், காஷ்மீரின் பனிமலையும், பாங்காக்கின் பெண்களும், கோவாவின் சிறுவர்களும் தங்கள் நுகர்வுக்காகவே இறைவனால் படைக்கப்பட்டிருக்கின்றன என்று கருதும் சொர்க்கபுரிவாசிகளான அமெரிக்கர்கள் என்ன சொல்கிறார்கள்?

"மீண்டும் வியத்நாம்" என்ற தலைப்பில் அமெரிக்காவிலிருந்து வெளிவரும் நியூஸ்வீக் வார இதழ் (நவ '94) வெளியிட்டுள்ள புகைப்படக் கட்டுரை கீழ்க்கண்டவாறு துவங்குகிறது:

"வியத்நாமைப் போல வேறெந்த ஆசிய நாடும் அமெரிக்க மனங்களை ஆக்கிரமித்ததில்லை. ஒரு தலைமுறைக்கு முன் அமெரிக்க ரத்தத்தையும் செல்வங்களையும் ஏராளமாக உறிஞ்சிக் குடித்த ஒரு சிறிய ஏழை நாடு - வியத்நாம்"

அமெரிக்கப் போர் விமானங்கள் வீசிய குண்டுகளின் கந்தக நெடிகூட இன்னும் வியத்நாம் மண்ணிலிருந்து நீங்கவில்லை; அதற்குள் வரலாற்றைத் தலைகீழாகத் திரிக்கும் இந்தக் கயவர்கள்தான் இப்போது கோவாவிற்கு வரவிருக்கிறார்கள்.

தாய்லாந்தைக் குதறிய நாய்கள் இப்போது தங்கள் பார்வையை நம் பக்கம் திருப்பியுள்ளன. இந்தியச் சிறுமிகளை விபச்சாரிகளாகவும், சிறுவர்களை விபச்சாரத் தரகர்களாகவும் மாற்றியபின், எழுதுவார்கள்:

"இந்தியா - தனது சிறுமிகளையும் சிறுவர்களையும் வைத்து அமெரிக்க இளைஞர்களை மயக்கி, அவர்களது செல்வத்தையும் ஏமாற்றிப் பிடுங்கிக் கொண்ட வேசிகளின் தேசம்" - என்று.

அனுமதிக்கப் போகிறோமா இந்த அமெரிக்க நாய்களை?

— சூரியன்



படிப்பகம்

www.padippakam.com




ஸ்காட்லாந்தின் தலைசிறந்த ஆட்டு ரோமம் ஊறப்போடப்படும் நதியே 'ரெட் டெய்லர்' கம்பெனிக்குச் சொந்தமாம். அவர்கள் 200 வருடமாக உலகின் மன்னர்களுக்கெல்லாம் உடை தயாரிப்பவர்களாம். அந்த நிறுவனத்தின் கூட்டுடன் எஸ்.குமார் வழங்கும் துணியின் விலை ரூ. 72,000.

# தங்க மனிதர்கள்!

மில்லனியம் ● அம்பானிகளின் ரிலையன்ஸ் நிறுவனம் அறிமுகப்படுத்தியிருக்கும் புதிய வகை துணியின் பெயர். ஒரு பேண்ட், சூட் தைக்கத் தேவையாகும் துணியின் விலை ரூ. 72,000. இதில் 22 காரட் தங்க இழையும், காசுமீரத்து உயர்ரக கம்பளியும், உன்னத பட்டு நூலும் இழைந்தோடுகின்றனவாம்.

இயேசு நாதர் பிறந்த ஆண்டிலிருந்து வரும், ஒவ்வொரு ஆயிரம் ஆண்டுகளையும் மில்லனியம் என்றழைப்பர். இப்போது மூன்றாம் மில்லனியம் தொடங்க இருக்கின்ற வேளையில், அடுத்த நூற்றாண்டிற்கான துணி வகையை அறிமுகப்படுத்துகிறது விமல் நிறுவனம். அதே சமயம் இயேசு நாதர் பிரசங்கத்தைக் கேட்கக் குழுமியிருந்த மக்கள் உடுத்தியிருந்த அரை - குறைக் கந்தல் ஆடைதான் இன்றும் தொடர்கிறது பெரும்பான்மை மக்களிடத்தில். அன்று பட்டுப் பீதாம்பரம் உடுத்தி, திராட்சை ரசத்தில் மூழ்கியிருந்த மன்னர்களும், பரிவாரங்களும் இருந்தார்கள். இன்று அவர்களின் வாரிசுகள் தொடருகின்றார்கள்.

அவர்கள் 'உன்னதமான' மேட்டுக் குடியினர். இந்த 'மேன் மக்களுக்காக' மட்டும் இந்தியா பெருமைப்படலாம். இவர்கள் வாழ்க்கை தங்கத்தால் அலங்கரிக்கப்படுகிறது.

லட்சத்தை நிமிடங்களிலும், கோடியை சில மணி நேரங்களிலும் பார்க்கும் வர்க்கத்திற்கு காலம் பொன் போன்றதல்லவா? காலம் காட்டும் கடிகாரத்தையும் பொன்னில் செதுக்கி, வைரக்கல் பதித்து வெளியிட்டிருக்கிறது டாடாவின் டைட்டான் நிறுவனம். ஒரு கடிகாரத்தின் விலை 25,000 முதல் 1 லட்சம் வரை.

ஏரோ என்ற காலணிகள் தயாரிக்கும் நிறுவனம் இத்தாலிய வடிவமைப்பாளர்களின் உதவியோடு, இறக்குமதி செய்யப்பட்ட உயர்ரகத் தோலில் தயாரிக்கின்ற காலணிகள் - விலை ரூ. 2,600. உண்டு களித்து ஓய்ந்த நேரங்களில் கால்ஃப் விளையாட செல்லும் போது அணியும் ஷூக்களின் விலை ரூ. 8000.

பசுமையை மட்டுமே பார்க்கப் பிறந்த கண்களுக்காக வந்திருக்கின்றன தங்க விளிம்பிட்ட ரே-பான் குளுகுளு கண்ணாடிகள். இந்தக் கண்ணாடியை அணியக் கொடுத்து வைத்த 'வாடிய பயிரையும் கண்டு வாடும்' வர்க்கத்துக்கு, சோமாலியாவும், தார் பாலைவனமும் கூட பச்சையாகவே தெரியும். விலை: ரூ. 2 லட்சம்.

சென்னைக் குடிசைகளுக்கும், ஏன் நடுத்தர வர்க்கத்தினரின் வீடுகளுக்கும் ஒரே வாசல் ஒரே அறைதான். ஆனால் கோத்ரெஜ் நிறுவனம் வழங்கும் குளிர் சாதனப் பெட்டிக்கு நான்கு கதவுகள் நான்கு அறைகள். கங்கோத்ரியின் சுத்தமான குடிநீரும், காசுமீரத்து ஆப்பிளும், பிரான்சின் ஒய்யாரமான ஒயினும், தஞ்சையின் ஏற்றுமதி ரக இறால் மீன்களும் வைப்பதற்கான போதிய இடவசதி இதில் உண்டு. சைவத்துக்கு ஒரு அறை; அசைவத்துக்கு ஒரு அறை; மதுவுக்கு ஒரு அறை; பொதுவாக ஒரு அறை. இந்த குளிர்சாதன 'வீட்டின்' விலை ஒரு லட்சம்.

கால் கடுக்க காத்து நின்று, பேருந்தில் தொங்கி திரையரங்கில் சீட்டு வாங்க கசங்கி - சக மனிதர்களின் வியர்வை நெடியில் திரைப்படம் பார்ப்பது நம் விதி. உலகைக் காட்டும் சன்னலாக தொலைக் காட்சியும், வீடியோவும் வீட்டறைக்குள் வந்தாலும், திரையரங்கத்தின் ஸ்டீரியோ - போனிக் சிறப்பு ஒலி, அகன்ற தெளிவான வண்ணக்காட்சி போன்ற வசதிகள் இல்லாதது இவர்களைத் தொல்லைப்படுத்தியது. அதனாலென்ன, திரையரங்கத்தையே வீட்டிற்குள் கொண்டு வருகிறது பி.பி.எல். (B.P.L) நிறுவனத்தின் தயாரிப்பான, 'வீட்டுத் திரையரங்கு சாதனம்' (Home Theatre System). இதனால் திரையரங்கில் பார்க்கின்ற திருப்தியை நிச்சயமாக ஏற்படுத்த முடியும். ஒளிநாடா டிஸ்க் மூலம் திரைப்படத்தின் அனைத்துக் கூறுகளையும் உணர்ந்து ரசிக்கலாம். சிறப்பு ஒலி - ஒளி, அகன்ற திரை, ஆடியோ, வீடியோ என பல்வேறு இணைப்புகள். விலை ரூ. 1,50,000.

இவற்றையெல்லாம் வாங்குவது எத்தனை பேர்? விரல் விட்டு எண்ணி விடலாம் என்று எண்ண வேண்டாம். இதுவும் வாங்கி, இதற்கும் மேலேயும் வாங்க பணம் உள்ளவர்கள் 38 லட்சம் பேர் இந்தியாவில் இருப்பதாக இந்திய சந்தையாராய்ச்சி நிறுவனம் (I.M.R.B) தெரிவிக்கிறது.

ஒரு பெட்டிக் கடையிலேயே தனக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் வாங்கி முடிக்கிறார்கள் அடித்தட்டு மக்கள். நடுத்தர வர்க்கமோ கண்ணாடியின் பின்னே காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் பொருட்களை ஏக்கத்துடன் பார்க்கிறது. கொஞ்சம் தரமான வாழ்க்கைச் சாதனங்களை வாங்க நினைக்கிறது.

உயர்ரக மேட்டுக் குடியினரின் கதை வேறு. பொருளோ, பயன்பாடோ, தரமோ ஒரு பொருட்டல்ல. உலகக் கலாச்சாரத்தின் சொந்தக்காரர்கள் ஆயிற்றே. மேற்குலகம் வாந்தியெடுக்கும் நவீன பாணி நாகரிகத்திற்கு கீழையுலகின் கூட்டாளிகள் இவர்கள்.

காலனிய ஆட்சியின் போது வெளிநாடுகளுக்கு பயணம் செய்யும் இந்திய மன்னர்கள், எவனாவது ஒரு ஐரோப்பிய இளவரசன் வெள்ளியில் கழிப்பறை செய்து வைத்திருப்பதைப் பார்த்து விட்டால், உடனே தன் அரண்மனையில் தங்கக் கக்கூசு வைத்து அழகு பார்ப்பார்கள்.

இன்று வந்திருப்பது முத்திரை (Label) மோகம். தேச, மொழி, பண்பாட்டு எல்லை கடந்து, சர்வதேசக் கொள்ளையர்களும், அதில் பொறுக்கித் தின்பவர்களுக்கும் ஒரே சீருடை, ஒரே அலங்காரம். நமக்கும் எதிரிகளை அடையாளம் காண்பது சுலபம் தான்.

படிப்பகம்

www.padippakam.com

# இறால் மீனும் ஞானப் பாலும்

ஞானப்பாலுக்கும்
இறால் மீனுக்கும்
என்ன சம்பந்தம்?

ஞான சம்பந்தம்.

சீர்காழித் திருத்தலத்தின்
திருக்குளக்கரையிலே
அம்மா... என்றொரு
அழுகுரல் கேட்டதும்,

குழந்தையின்
தந்தையைத் தேடின
தாயின் கண்கள்.

அவன் மார்பில் நெளிந்தது
முப்புரி நூல்.
அவள் மார்பு சுரந்தது
ஞானப்பால்.

தோடுடைய செவியன்
எனத் தொடங்கி
காடுடைய சுடலை பூசிய,
கள்வனைப் பாடியதும்
குடித்தது ஞானப்பாலே - என
முடித்தது உலகம்.

தென்னாடுடைய
சிவனை உள்ளிட்ட
எந்நாட்டவர்க்கும் இறைவராம்
பன்னாட்டுக் கள்வரைப்
பாடுவதே ஞானம் - அவரடி
நாடுவதே
நம் ஞானத்தின்
பரிணாமம் - என
ஆடுகின்ற கூட்டமும்
அருந்தியது —
அமெரிக்க 'சுதந்திர' தேவியின்
உயர்திரு முலைப்பால்.

ஞானசம்பந்தய்யர்
அவதரித்தது சீர்காழி.
மணிசங்கரய்யர்
வந்திறங்கியது சீர்காழி.

ஞானப்பாலுக்கும்
இறால் மீனுக்கும்
அவதாரத் திருத்தலம் ஒன்றே!
அடடா... என்ன ஒற்றுமை!

ஞானப்பால் புரதமும்
இறால்மீன் புரதமும்
தரத்தில் உயர்ந்தவை.
தரத்தில் உயர்ந்தோரின்
உதரத்திற்காகவே
உருவாக்கப்பட்டவை.

சைவம் தழைக்க
ஞானப்பால்.
வெள்ளையன் கொழுக்க
இறால்மீன்.

●



'கேழ்வரகில் நெய் வடிகிறதாம் - கேளுங்கள்' - இறால் பண்ணையின் ஆதாயங்களை மக்களுக்கு விளக்குகிறார் மணிசங்கர் அய்யர்.

அறுத்துக் காய்ந்து
பிளந்து கிடந்த நிலத்தில்
ஒருநாள்
செருப்புடன் கால் வைத்தேன்.

"தம்பி.. படிச்ச புள்ள
இப்பிடிச் செய்யலாமா?"

கிழவனின் குரல் கேட்டுத்
தீயை மிதித்தவன் போல்
காலை எடுத்தேன்.

நிலத்தைத்
தாயின் மார்பாகவும்
சிலிர்த்துக் கிளம்பும்
தளிர் நாற்றை
முலைக்காம்பாகவும்
நினைத்தானோ கிழவன்!

அந்த உழவனின்
ஆசைகளையும் நம்பிக்கைகளையும்
என் படிப்பு
கற்பித்திருந்தால்

கால் வைத்திருக்க முடியுமா
இறால் பண்ணையார்கள்
விளைநிலத்தில்?

"அது மூடநம்பிக்கை.
காய்ந்து கிடக்கும் மண்ணில்
காவிரி பாய்ந்தாலென்ன
கடல்நீர் பாய்ந்தாலென்ன
காசு வருதா தள்ளிவிடு"

என்கிறது ஞானப்பால்
மணிசங்கரய்யர்.

அது மூடநம்பிக்கையெனில்
அவன்
தாய்ப்பால் அருந்திய மூடன்
ஞானப்பால் மறுத்த மூடன்
அந்த
மூடனின் வாரிசே நான்.

பயனற்றவைகளை
உதறிவிடு —
அதுவே ஞானம்
என்கிறது ஞானப்பால்.

உலவச் சென்ற கால்களில்
ஒட்டிய கடல்மணலா
உதறுவதற்கு?

பயிர்களில்
ஆயிரம் தலைமுறை,
பண்படுத்திய
நீண்ட பரம்பரை - அவன்
குருதியும் எலும்பும்
குழைந்து மணக்கும்
மண்ணை,

ஆசையும் அவலமும்
துடித்துக் கொண்டிருக்கும்
மண்ணை,
தன்னை,
உதறுவதா?

ஏர்முனை உதறுமா?



படிப்பகம்

www.padippakam.com

எருதின்
குளம்புகள் உதறுமா?

ஓராயிரமாண்டுகள்
உழுது பெற்று,
நாற்றைத் தாலாட்டி
கதிரைச் சீராட்டி
சிரித்தால் சிரித்து
துவண்டால் துவண்டு

ஆசையாய் அருமையாய்
மருதம் என்று பெயரிட்டு
வளர்த்த மண்ணை,
மகவை
உதறுவதா?

காலொடிந்த குதிரையைக்
கல்லறைக்கும்
மேலொடிந்த முதியோரை
இல்லத்திற்கும்
உதறிவிடும் ஞானப்பாலே,

நொண்டி மாட்டுக்கும்
கண்ணீர் வடிக்கும்
ஞான சூனியங்கள்தான் - எம்
மூதாதையர்கள்.

வானம் பார்த்துச் சலித்து
வண்டியேறிப்
பட்டணம் வந்து,

பாரவண்டி இழுத்து
பாதாள சாக்கடை தோண்டி

கல் சுமந்து மண் சுமந்து
கூச்சம் விட்டு - நடை
பாதையிலே
குடும்பத்துடன் படுத்துறங்கி
நாலு காசு சேர்த்தபின்னே,

''மழை பெஞ்சதா
மணியார்டர் அனுப்பவா''

என்று
மச்சானுக்கு லட்டர் போட்டு
மண்ணை
நலம் விசாரிக்கும்
களிமண்களே - எம்
மூதாதையர்கள்

அவர்களுக்கு
அந்நியச் செலாவணியின்
அருமை தெரியாது
அறிவு கிடையாது

தாய்ப்பால் குடித்தவனுக்கு
உணர்ச்சி
ஞானப்பால் குடியனுக்கு
அறிவு.

●

**இ**தோ
என்னுடைய மண்

''கட்டுக் கலம் காணும்
கதிர் உழக்கு நெல்காணும்
அடித்துப் பொலி தூற்ற
அதுவும் கலம் காணும்''
என்று

## எங்கள் நகரம் உங்கள் ஆட்சி!

மே-1 இறால் பண்ணை அழிப்புப் போராட்டச் சுவர் விளம்பரங்கள் சீர்காழி வட்டாரமெங்கும் தென்படத் துவங்கியவுடனேயே எதிரிகள் சுறுசுறுப்பாகிவிட்டார்கள். மணிசங்கர் ஐயர் முதல் பினாமி பெயரில் பண்ணை துவங்க முனையும் மந்திரிகள் வரை அனைவரும் 'ஆர்ப்பாட்டமில்லாமல்' சீர்காழி வரத்தொடங்கிவிட்டனர்.

நகராட்சிக்குச் சொந்தமான சுவர்களில் எழுதப்பட்டிருந்த போராட்ட முழக்கங்களையெல்லாம் அழிக்கச் சொல்லி உத்தரவிட்டிருக்கிறார் சீர்காழி நகராட்சி ஆணையர். வி.வி.மு. தோழர்களும், வலது கம்யூனிஸ்டு மற்றும் தி.க. தோழர்களும் ஆணையாளரைச் சந்தித்திருக்கின்றனர். ஆபாச சுவரொட்டிகளும், எல்லா கட்சிகளின் விளம்பரங்களும் நகராட்சி சுவரில் இருக்கும் போது இதை மட்டும் அழித்தது ஏன்? என்று கேட்டிருக்கின்றனர். ''சட்டம் ஒழுங்குப் பிரச்சினை'' ''மேலிடத்து உத்தரவு'' என்று பலவாறாக மழுப்ப முனைந்த ஆணையரை சென்றிருந்த தோழர்கள் எதிர்க்கேள்விகளால் துளைத்தனர். ஆத்திரமடைந்த ஆணையர் ''என்னுடைய சுவரில் எழுதினால் நான் அழிப்பேன்'' என்று திமிராகப் பேசியிருக்கிறார்.

''உங்களுடைய சுவரா? ஐயா இது எங்களுடைய ஊர், அது நினைவிருக்கட்டும்'' என்று எச்சரித்தனர் சென்றிருந்த தோழர்கள்.

சீர்காழி வட்டாரத்தில் வாங்கிப் போட்ட நிலத்தில் பண்ணை துவங்க 'நேரங்கெட்ட நேரத்தில்' வந்தனர் பினாமி நிறுவனத்தினர். சும்மா இல்லை. 15 வேன்களில் அடியாட்களுடன். ஆனால் ஊரே திரண்டு சென்று வேன்களை மறித்துத் தாக்கி அவர்களைத் துரத்தியடித்தது. மூச்சிரைக்க ஓடி, ஒரு மீனவர் குப்பத்திற்குப் போய்ச், 'தஞ்சமடைந்தனர்' சில அடியாட்கள். அவர்களுக்கு தாகத்துக்குத் தண்ணீரும் தந்து, துடைப்பத்தால் நாலு அடியும் வைத்து விரட்டியிருக்கின்றனர் மீனவப்பெண்கள்.

ஊரில் ஆளில்லாத நேரத்தில் இருந்த ஒன்றிரண்டு பேரை ஆயுதங்களால் தாக்கிவிட்டு ஓடியிருக்கின்றனர் அந்தக் காலிகள்.

'வேலைவாய்ப்பு தரும் இறால் பண்ணையை ஆதரிப்போம் — இங்ஙனம் ஏழை எளிய மக்கள்' என்று சில சுவர் விளம்பரங்களும் தோன்றியுள்ளன. 'யார் அந்த ஏழை' - என்கிறீர்களா? வேறு யார் மணிசங்கர் அய்யர் தான். இந்த ஏழைகளின் வாழ்வை மலரச் செய்யத்தானே இறால் பண்ணை!

என உழவன்
நெஞ்சு நிமிர்த்திய மண்,

''காசாப் படியளந்தா
கனத்தநேரம் செல்லுமின்னு
நெல்லாப் படியளந்தா
நீண்டநேரம் செல்லுமின்னு
அரிசியாய் படியளந்தா
ஆக்கநேரம் செல்லுமின்னு
சோறாப் படியளந்த

**உன்தேசியம் எம்மைத்
தரிசாக்கியது
உன் சர்வதேசியமோ
எம்மைப்
பாலையாக்குகிறது.
களஞ்சியத்தைக்
களவாடிவிட்டுக்
கஞ்சித் தொட்டியா
திறக்கிறாய்?**

சோழமன்னர் பண்ணை'' - என்று
முதுகில் பொதி சுமந்து
முற்றத்திலே அடுக்கிவிட்டு
படிக்கும் மரக்காலுக்கும்
மடி விரித்துக் காத்துநிற்கும்
பண்ணையாட்களின்
'பெருமிதம்' விளைந்த மண்.

காலுக்கு வெள்ளியும்
பல்லுக்குத் தங்கமும் பூட்டிப்
பவிசு காட்டிய
பண்ணைகளின் நாட்டில்

''வெள்ளிப்புடி அறுவா
வெடலப்புள்ள கையறுவா
சொல்லி அடிச்ச அறுவா
சுழற்றுதடி நெற்கதிரை''

என்று
அரிவாளுக்கு
வெள்ளிப் பூண் மாட்டி
அழகு பார்த்த
உழைப்பாளிகளின் மண்.

அந்த மண்ணா பாலையாவது?

பாலையை நெய்தலாக - ஒரு
பாட்டிலே திருத்திய - ஞானப்
பால் எங்கே - கூப்பிடு!

அந்நியச் செலாவணிப்
பாட்டினால் பாலையாகும்

படிப்பகம்

www.padippakam.com

நெய்தலில்
காட்டு உன் கவித்திறத்தை.

●

அலை நாக்கை நீட்டிநீட்டி

ஆவலுடன் விழுங்கவந்து - பச்சைத்
தளிர் நாற்றின் தலையசைப்பில்
மனம் கிறங்கிப் பின்வாங்கும்,
வங்கக்கடலை

வலிய இழுத்து வந்து
விளைநிலத்தை
விழுங்கு விழுங்கென்று
வாயில் திணிக்கிறது - உன்
அரசாங்கம்.

எங்கள்
கடலை அந்நியனுக்கும்
கரையைத் தரகனுக்கும்
தாரை வார்த்த - உன்
தாராளக் கைகள்

''வாசி தீரவே
காசு நல்குவீரென'' நாளை
யாசிக்கும் போது
படியளக்கப் போவது யார்?[2]

தோணியப்பரா,
டாலரப்பரா?

உன் தேசியம் எம்மைத்
தரிசாக்கியது.
உன் சர்வதேசியமோ எம்மைப்
பாலையாக்குகிறது.

வரப்பு கட்டாத மீனவன்
கடல் இழந்தான்
வரப்பு கட்டிய உழவனும்
நிலமிழந்தான்.

பாத்தி கட்டிய
கடலைக் கண்டு - இது
வேறு தேசமென்று
திரும்புகின்றன புள்ளினங்கள்.

விளைநிலத்தைப் புதைப்பதற்கு
வெட்டப்படும்
புதிய சவக்குழிகளின் மீது
இறங்குகின்றன கழுகுகள்.

தத்தெடுக்கப்பட்ட
இறால்கள் துள்ளுகின்றன
கடலன்னை
பெற்றெடுத்த மீன்களோ
கருகுகின்றன.

காவிரி மணல்வீட்டைக்
கனவு காணும் சிறுவர்களிடம்
பாலையிலும்
மணல்வீடு கட்டலாமென
ஆசை காட்டுகிறது
ஞானப்பால்.

களஞ்சியத்தைக்
களவாடிவிட்டு
கஞ்சித் தொட்டியா
திறக்கிறாய்?

●

அறிவேன்.

ஆம் என்றால்
அன்பே சிவம்.
ஏன் என்றால்
கழுமரம்.

உன் நீதியை அறிவேன்.

உற்சவத்தின் மூர்த்தியாய்
உயர்ந்த - கழுமரத்தில்
உயிர்விடும் சமணப்
பொம்மையைத்தான்
பார்த்துள்ளேன்.[3]

பார்த்ததில்லை.
குதவாயின் உட்புறத்தில்
கூர்முனை திணித்து - அது
மெதுவாக உடல் குடைந்து
மேல்நோக்கிச் செல்லும்போது

**எங்கள்
சேற்றில்தான்
புழுக்குமோ - உன்
சுதந்திரம்?
எங்கள்
பிள்ளைக்கறிதான்
கேட்குமோ - உன்
தங்கமீன்?**

இதுவோ எம் விதியென்றெண்ணி
அழுதாரா தொழுதாரா
விழிகள் குத்திட்டு
விரைத்தாரா - பார்த்ததில்லை.
பார்க்கின்றேன் —
ஏர்முனை உழுத மண்ணின்
இடுப்பிலே கடல்நீர் பாய
யார் நிலம் முதலில் என்ற
எண்ணமே குலையறுக்க - காவிரி
நீர் பாய்ந்த மண்ணோ மருதமோவென்று
ஊர் கலங்கும் காட்சிதனைக்
காண்கின்றேன்.

கண்ணொன்றைக் கழுகு மொய்க்க
கைகளை நரிகள் தீண்ட
நாய்களின் ஊளைச்சத்தம்
பேய்களோவென வெருட்ட - உயிர்
அழிவதைக் காண்பதற்கு - ஒரு
விழி மட்டும் விழித்திருக்க - அந்த
வேதனை பார்த்ததில்லை.

பார்க்கின்றேன் —
முப்புறம் இறால்மீன் பண்ணை
அப்புறம் கொஞ்சம் பச்சை
எப்புறம் நோக்கினாலும்
எதிர்ப்படும் ஏவல்நாய்கள்
விற்பதா விதைப்பதா - எதிர்த்து
நிற்பதா வீழ்வதாவென்று
வெளிறிய முகத்திலெல்லாம் - அந்த
வேதனை - பார்க்கின்றேன்.

●

எங்களைக்
கழுவிலேற்றிய பிறகுதான்
இறங்குமோ - உன்
உற்சவத்தின் கொடி?

எங்கள்
வயல்களைத்தான்
வளைக்குமோ - உன்
பிரம்மதேயம்?

எங்கள்
சேற்றில்தான்
புழுக்குமோ - உன்
சுதந்திரம்?

எங்கள்
பிள்ளைக்கறிதான்
கேட்குமோ - உன்
தங்கமீன்?

''ஊர் பரந்த உலகின்
முதலாகிய ஓர் ஊரிதுவெனப்
பேர் பரந்த பிரமாபுரத்தை''[4]

மீண்டும்
பேர் திரித்து - அதனைப்
பாலையாக்கி
வேர் அறுத்து - எம்மை
விட்டெறிய

வேடிக்கை பார்ப்பதற்கோ - எம்
வீச்சரிவாள்?

— மருதையன்

குறிப்பு

*1. தனது தாயின் பிறந்த ஊராகிய, நெய்தல் சார்ந்த திருநனிபள்ளி மழையின்றிப் பாலையாக மாறியபோது, அவ்வூர் இறைவன் மீது ஒரு பதிகம் பாடி பாலையை மீண்டும் நெய்தலாக்கினாராம் ஞானசம்பந்தர்.*

*2. சீர்காழியில் பஞ்சம் தாண்டவமாடிய போது தோணியப்பர் (இறைவன்) தனது கோயிலின் கிழக்குப் புறத்தில் சம்பந்தருக்கும், மேற்குப் புறத்தில் அப்பருக்கும் தலா ஒரு படி பொற்காசு கொடுத்ததாகவும், அதைக் கொண்டு அடியார் பசியாறியதாகவும் கதை. சம்பந்தருக்கு இறைவன் கொடுத்த பொற்காசுகள் மாற்றுக் குறைவாக இருந்ததால், 'வாசிதீரவே காசு நல்குவீர்' எனப்பாடி மாற்றுக்குறையாத காசு பெற்றாராம்.*

*3. சீர்காழியில் ஆண்டுதோறும் நடக்கும் திருமுலைப்பால் உற்சவத்தில் சமணர் பொம்மைகள் கழுவிலேற்றப்படும்.*

*4. சம்பந்தர் தேவாரம். சீர்காழியென்ற தமிழ்ப் பெயரை மாற்றி அவ்வூருக்கு வைக்கப்பட்ட வடமொழிப்பெயர் பிரமாபுரம்.*



படிப்பகம்

www.padippakam.com

# 5 போலி மார்க்சிஸ்டுகளின் வேத உபதேசம்

பாரதீயத் தத்துவத்திற்கு பிரதிநிதித்துவ வாரிசுரிமை கொண்டாடும் சங்கரன் நம்பூதிரியும் அவரது சிஷ்ய கோடிகளும் கொஞ்சமும் கூச்சநாச்சமின்றி தமது ஆரிய-பார்ப்பனத் தன்மையை வெட்ட வெளிச்சமாக்கியுள்ளனர்.

அதேபோல ''ஆரிய - பார்ப்பன சனாதன பிரம்ம சூத்திரத் தத்துவம்'' மார்க்சிய - லெனினிய தத்துவத்துக்கு எதிரானது, உழைக்கும் மக்களுக்கு எதிரான வர்ணாசிரம, சாதீய அடிப்படையிலானது என்பதை சங்கரன் நம்பூதிரியும் அவரது சிஷ்யகோடிகளும் ஒப்புக் கொண்டாலும் ''அறிவார்ந்த சிந்தனைப் பணி'', ''தத்துவ ஞானம்'', ''பாரதீயத் தத்துவம்'' என்று கூறி ஏற்றிப் போற்றுகின்றனர்.

வேதங்கள், உபநிடதங்கள் போன்ற வற்றின் சமூகப் பங்குபற்றி அந்தப் போலி மார்க்சிஸ்டுகளே, ''நால்வருண முறையின், இந்திய அடிமை முறையின் தத்துவங்கள் தான் வேதங்களும் உபநிடதங்களும். பிராமண ஆதிக்கத்திலான சாதீய முறையின் தத்துவங்களும் இவைகள்தான்.'' (மார்க்சிஸ்ட்'93, அக். பக்: 34) என்கின்றனர்.

''வேதங்களின் இறுதிப்பகுதி என்ற முறையில் பிராமணங்கள், ஆரண்யுங்கள், உபநிடதங்கள் என்று ஏராளமான புதிய தத்துவ விளக்கங்களை உருவாக்கியுள்ளனர். இந்த வளர்ச்சிப் போக்கில் வேத காலத்தின் - வேதமதத்தின் எளிமை மறைந்தது. பிராமண ஆதிக்கம் வலுவடைந்தது. இந்த புதிய தத்துவங்கள் எல்லாம் பிராமண ஆதிக்கத்தின் தத்துவ அடிப்படையாக அமைந்தது.''

''இக்காலத்தில் தான், பிரம்மம் தான் உண்மை உலகு மாயை என்று ஒரு உபநிடத விளக்கத்தை - பிரம்ம சூத்திரம் என்ற விளக்க உரையை பாதராயணன் (வேத வியாசர்) உருவாக்கினார். இதனை அடிப்படையாகக் கொண்டு தான் பிற்காலத்தில் சங்கராச்சாரியார் தன்னுடைய பிரம்ம சூத்திரத்தை எழுதினார். உபநிடத காலத்தில் தான் முன்பிறப்பு, மறு பிறப்பு, கரும பலன், தலையெழுத்து, நரகம், சொர்க்கம் போன்ற தத்துவங்கள் எல்லாம் பரப்பத் தொடங்கினார். உபநிடத காலத் தத்துவங்கள் இந்திய சமுதாயத்தில் ஒரு பின்னடைவை அல்லது தேக்க நிலையை உருவாக்கியது என்று கூறினால் மிகையாகாது.''

உபநிடத காலத்தைத் தொடர்ந்து, பிராமண ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிய லோகாயத, சார்வாக, ஆஜீவக, புத்த, சமண, தத்துவங்களின் வீழ்ச்சியும், சாதீய அமைப்பிலும், புராதன ஆச்சாரங்களிலும் வேரூன்றிய இந்து மதத்தின் முன்னேற்றமும் புதிய தத்துவ இயக்கத்திற்குப் பாதை திறந்து விட்டது; பழைய வைதீக ஆச்சாரங்களின் புனரமைப்பு என்ற முறையில்தான் இந்துமதம் வலுவடைந்தது; ஆனால், புதியதத்துவ சிந்தனைகளின் புதுவடிவம் என்ற முறையில் மதத்தின் கையைப் பற்றிக் கொண்டுதான் தத்துவங்கள் முன்னேற வேண்டியிருந்தது. சங்கரன், இராமானுஜர், மத்வர் முதலிய புகழ்பெற்ற சிந்தனையாளர்கள் எல்லாம் உபநிடதத் தத்துவங்களையும் புராணவேதாந்தத்தையும் பகவத் கீதையையும் சனாதன தர்மங்களையும் உயர்த்திப் பிடித்துக் கொண்டுதான் தங்களின் தத்துவங்களுக்கு வடிவம் அளித்தனர் என்கின்றனர் போலி மார்க்சிஸ்டுகள்.

ஆக, வேத உபநிடத காலத்திலும் அதற்குப் பின்வரும் ஆரிய - பார்ப்பன சனாதனிகளால் உருவாக்கப்பட்ட தத்துவங்கள் எல்லாம் வர்ண - சாதி ஒடுக்குமுறைக்கான ஆயுதங்களாகவும், சமுதாய முன்னேற்றத்துக்குத் தடைகளாகவும், பிற்போக்கானவைகளாகவும் இருந்தன என்கிற முடிவுக்குத்தான் மேற்கண்ட போலிமார்க்சிஸ்டுகளின் தொகுப்பில் இருந்து வரமுடியும். ஆனால் தமது ஆரிய - பார்ப்பனத் தன்மையின் காரணமாக அவற்றையே இவர்கள் தலைசிறந்த, தன்னிகரற்ற தத்துவ அறிவுச் சாதனைகள் என்று போற்றுகின்றனர்.



''உலகில் முதன்முதலாக தத்துவ சிந்தனை வளர்ச்சி அடைந்த மிகச் சில நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இந்தியாவும் கிரேக்கமும் தான் அவைகளில் முதலில் இடம்பெறும் நாடுகள். இன்று உலகில் மிகவும் முன்னேறியுள்ள ஐரோப்பாவும் அமெரிக்காவும் மிகவும் பின்தங்கியிருந்த காலத்தில் தத்துவச் சிந்தனையில் ஈடுபடும் அளவிற்கு இந்திய நாடு வளர்ச்சியடைந்திருந்தது.'' ('93 ஜீலை, மார்க்சிஸ்ட் பக்: 29) என்று பீற்றிக் கொள்கின்றனர்.

குறிப்பாக ஆதிசங்கரனின் தத்துவ வெற்றி, பிராமணர் மற்றும் மற்ற ஆதிக்க ஜாதிகளின் வெற்றி; இந்தியச் சமுதாயத்தின் மற்ற பகுதியின் தோல்வி என்பதை சங்கரன் நம்பூதிரி ஒப்புக் கொள்கிறார். ''பிராமண மேலாதிக்கத்தின் கையில் ஒடுக்கப்பட்ட சாதிகளின் தோல்வி, கருத்து முதல்வாதத்திடம் பொருள் முதல் வாதம் அடைந்த தோல்வி ஆகியவை, இந்திய நாகரீகம் மற்றும் கலாச்சாரத்தின் வீழ்ச்சியின் ஆரம்பமாக அமைந்தது. இது இறுதியில் தேச சுதந்திரத்தை இழப்பதற்கு இட்டுச் சென்றது'' என்பதை நம்பூதிரி ஏற்கிறார். இருந்தாலும் இதற்குரிய தத்துவத்தை உருவாக்கிய ஆதிசங்கரனை கேரள மைந்தர், மாமுனிவர் என்று போற்றுகிறார்.

''சங்கரர் இந்தியாவின் (மேலும் உலகத்தின்) கருத்து முதல்வாத தத்துவ ஞானிகளில் மிக உயர்ந்தவர். அவருடைய அத்வைத வேதாந்தம், இந்திய மனித சமுதாய அறிவுக் களஞ்சியத்துக்கு அளித்த விலை மதிப்பற்ற அன்பளிப்பாகும்.'' என்கிறார் நம்பூதிரி. ''ஆதிசங்கரனின் திறமை அசாதாரணமானது; அவர் 32 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்தார். வேதங்கள், உபநிடதங்கள் அவர் காலத்தின் பல்வேறு தத்துவங்கள் ஆகிய அனைத்திலும் ஆழமான புலமைபெற்று எதிர்த்தரப்பு தத்துவ சிந்தனையாளர்களையெல்லாம் தோற்கடித்து இந்திய நாட்டின் சிந்தனைத் துறையில் பெரும்தாக்கத்தை ஏற்படுத்தினார்'' என்று நம்பூதிரியின் தமிழ்நாட்டுத் தத்துவத் தரகர் பரமேசுவரன் புகழ்கிறார்.

ஆதிசங்கரனின் தத்துவத்தை இவ்வளவு தூரம் தாங்கிப் பிடிப்பதற்கு ஏதோ மார்க்சிய - லெனினியத் தத்துவ அடிப்படையிருப்பதைப் போல இந்தியப் போலி

படிப்பகம்

www.padippakam.com

மார்க்சிஸ்டுகளின் குரு சங்கரன் நம்பூதிரி வாதிடுகிறார். ''இந்தியத் தத்துவத்தின் மிக உயர்ந்த வடிவமான சங்கரனின் தத்துவம் மார்க்சிய லெனினிய இயக்க இயல் பொருள் முதல்வாதத்துக்கு எதிரானது என்றாலும் எந்த ஒரு மார்க்சியவாதியும், அத்தத்தத்துவத்தின் பரிணாம வளர்ச்சி, இந்திய சிந்தனை வளர்ச்சியின் ஒரு முக்கிய கட்டம் என்பதையும், அது இந்திய சமுதாய வளர்ச்சியோடு பிரிக்க முடியாத அளவுக்கு இணைந்தது என்பதையும் காணாமல் இருக்கமுடியாது'' என்கிற பொது அணுகுமுறையைப் பயன்படுத்தி பின்வரும் முடிவுக்கு வருகிறார் சங்கரன் நம்பூதிரி. அவர் கேரளாவில் பிறந்தாலும் இந்திய கருத்துமுதல் வாதத்தின் நல்ல அம்சங்களை முன்னுக்கு எடுத்துச் சென்ற மிகஉயர்ந்த அறிஞர் என்ற பெயரையும், புகழையும் பெற்றிருந்தார். அவருடைய வாழ்க்கையையும் எண்ணங்களையும், கேரளம் மட்டும் அல்லாது, முழுமையான இந்தியாவும் உருவாக்கியது' - என்கிறார்.

மார்க்சிய லெனினிய இயக்க இயல் பொருள்முதல்வாதத்துக்கு எதிரான கருத்துமுதல்வாதத் தத்துவத்தையே ஆதிசங்கரன் முன் வைத்தாலும் அதை இவ்வளவு தூரம் போற்றுவதற்கு நம்பூதிரி சொல்லும் காரணம் மிகப் பெரிய தத்துவ மோசடியாகும்.

கருத்துமுதல்வாதமும், பொருள்முதல்வாதமும் எல்லா நேரங்களிலும், எல்லா இடங்களிலும் ஒன்றுக்கொன்று எதிரான, எதிர்மறைத் துருவங்கள் அல்ல என்கிறார். அவற்றுக்கிடையிலான உறவு பற்றி பின்வருமாறு விளக்குகிறார்: ''இது நிஜ வாழ்க்கையிலும், மனித சிந்தனையிலும் உள்ள எதிர்மறைகளைப் போல், கருத்துமுதல்வாத, பொருள்மதல்வாத கருத்துப் போக்குகள், இயக்க மறுப்பு நிலையை விட (Metaphysical) இயக்க இயல்முறையோடு உறவுள்ளது என்பதைக் காணத்தவறுகிறது. கருத்துமுதல் வாதம், பொருள்முதல்வாதம் ஆகிய எதுவுமே ஒரே நிலையில் இருப்பது கிடையாது. எப்பொழுதும் அவை ஒன்றை ஒன்று நிராகரித்து முன்னேறுவது, புதிய, புதிய வடிவங்களில் அவைகளுக்கு இடையிலான போராட்டம் நடப்பது ஆகியவை, மனித சிந்தனையின் வளர்ச்சி விதியாகும். ஆகவே, பொருள் முதல்வாதம் என்ற வகையில் அது கருத்து முதல்வாதத்தைவிட உயர்ந்தது அல்லது கருத்து முதல்வாதம் என்ற வகையில் அது பொருள்முதல் வாதத்தை விட தாழ்ந்தது என்ற கேள்விக்கே இடமில்லை.'' ('89' அக். மார்க்சிஸ்ட் பக்:1)

சங்கரன் நம்பூதிரியின் மேற்கண்ட விளக்கமே அவரது தத்துவப் பித்தலாட்டத்தை அம்பலப்படுத்தி விடுகிறது. முதலில் அவரே கருத்து முதல்வாதமும் பொருள்முதல் வாதமும் எல்லா நேரங்களிலும் எல்லா இடங்களிலும் ஒன்றுக்கொன்று எதிரான, எதிர்மறைத் துருவங்கள் அல்ல என்கிறார். ஐந்தே வரிகளுக்குப் பிறகு, அவை எப்பொழுதும் ஒன்றை ஒன்று நிராகரித்து முன்னேறுவது புதிய, புதிய வடிவங்களில் அவைகளுக்கு இடையிலான போராட்டம் நடப்பது ஆகியவை மனித சிந்தனையின் வளர்ச்சி விதியாகும் என்கிறார். வேறொரு இடத்தில் மார்க்சிய - லெனினிய இயக்க இயல் பொருள்முதல்வாதம் ஆதிசங்கரனின் தத்தவத்திற்கு எதிரானது என்கிறார்.

உண்மையில், கருத்துமுதல்வாதம், பொருள்முதல்வாதம் ஆகிய இரு எதிரெதிரான அம்சங்களைக் கொண்ட முரண்பாட்டின் நிகழ்ச்சிப் போக்குத்தான் மனித சிந்தனையின் தத்துவ இயலின் வளர்ச்சி விதியாகும். இவை இரண்டும் எப்போதும் எந்த இடத்திலும் எதிர்மறைத் துருவங்கள் தாம். அவை சம நிலையிலோ, இணக்கமான உறவுடனோ ஒருபோதும் நிலவ முடியாது; இரண்டில் ஏதாவது ஒன்று ஆதிக்க நிலையில் இருக்கும்; சமனற்ற, எதிரெதிரான மாறுகின்ற மோதிக் கொள்ளும் நிலை இல்லை என்றால் மனித சிந்தனை, தத்தவ இயல் வளர்ச்சிப் போக்குக்கு அடிப்படையான முரண்பாடே இல்லாமல் போகும்.

> ''ஆதிசங்கரர் இந்தியாவின், உலகின் கருத்துமுதல்வாத தத்துவஞானிகளில் மிக உயர்ந்தவர். அவருடைய அத்வைத வேதாந்தம் மனித சமுதாய அறிவுக் களஞ்சியத்திற்கு அளித்த மாபெரும் அன்பளிப்பு'' என்கிறார் நம்பூதிரி. ''எதிர்த் தரப்பு சிந்தனையாளர்களைத் தோற்கடித்த சங்கரரின் திறமை அசாதாரணமானது'' என்கிறார் பி.ஆர்.பரமேசுவரன்.

இவ்விரு தத்துவப் போக்குகளுக்கு இடையிலான முரண்பாடு மோதலுக்கு அப்பால் ஒரு பொதுநிலை, நடுநிலையில் நின்று யாருமே மதிப்பீடு ஆய்வு செய்வது முடியாது. குறிப்பாக மார்க்சிய - லெனினியவாதிகளுக்கு இது சாத்தியமே இல்லை. ஏனெனில் இரண்டு போக்குகளில், பொருள்முதல்வாதம் பாட்டாளி வர்க்க சார்புடையது; கருத்துமுதல் வாதம் அதற்கு எதிரான வர்க்கங்களின் சார்புடையது. ஆனால் வர்க்க சார்பற்ற முறையில் பொதுநிலையில் நின்று மனித சிந்தனை,தத்துவார்த்தபோக்கை ஆய்வு-மதிப்பீடு செய்வதைப் போல பித்தலாட்டம் செய்கிறார் நம்பூதிரி. வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையிலான முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையிலான முரண்பாட்டில் எப்படி நடுநிலை கிடையாதோ, ''ஒரு வர்க்கமின்றி மற்ற வர்க்கம் கிடையாது,'' இரண்டும் சேர்த்து நடத்தும் வர்க்கப் போராட்டத்தில்தான் சமுதாய வளர்ச்சிப் போக்கு நிகழ்கிறது'' என்று கூறி அவ்வர்க்கங்களுக்குத் தூரத்தில் நின்று மதிப்பீடு - ஆய்வு செய்ய முடியாதோ அதேபோன்றதுதான் இதுவும்.

''கருத்துமுதல்வாத, பொருள்முதல் வாத, கருத்துப்போக்குகள், இயக்க மறுப்பு நிலையைவிட இயக்க இயல்முறையோடு உறவுள்ளது'' என்கிறவாதம் நம்பூதிரியின் இன்னொரு தத்துவப் பித்தலாட்டம். இந்த வாதத்தின் பொருள் என்னவென்றால், கருத்துமுதல்வாதம் என்றாலே இயக்க இயல் முறையை அடிப்படையாகக் கொண்டது என்றும், அதனால் இயக்க மறுப்பு நிலையைவிடவும், (இயக்க மறுப்புநிலை பொருள்முதல்வாதத்தைவிடவும் என்பதை மறைமுகமாகக் குறிப்பிடுகிறார்) இயக்க இயல் முறை உறவுகளை கருத்துமுதல்வாதத்தை தனக்கு சமநிலை உடையதாக நெருக்கமானதாக பொருள்முதல்வாதம் மதிக்கிறது'' என்கிறார். கருத்துமுதல்வாதமெல்லாம் இயக்க இயல் அடிப்படையிலானது என்பதே தவறானது; இயக்க இயல் அடிப்படையிலான கருத்துமுதல்வாதமோ, இயக்கமறுப்புநிலைவாத பொருள்முதல்வாதமோ, இரண்டுமே தவறானதாம்; ஒன்றைவிட ஒன்று மேலானது, பின்னதைவிட முன்னது தனக்கு நெருக்கமானது என்று மார்க்சிய - லெனினியப் பொருள்முதல்வாதம் எப்போதுமே கருதியது கிடையாது.

கருத்துமுதல்வாதம் முட்டாள்தனமானது என்று இயக்கமறுப்பு பொருள்முதல்வாதம் கருதியது; ஆனால் கருத்துமுதல்வாதம் ஒரு ஒருதலைப்பட்சமாக, மிகைப்படுத்தப்பட்ட, பொருளில் இருந்தும் இயற்கையில் இருந்தும் பிரித்து அறிவின் ஒரு பகுதியை, ஒரு அம்சத்தை, அதன் பன்முகங்களின் ஒன்றை முழுமையான கருத்தாகவும் தெய்வீகமானதாகவும் ஆக்குகிறது என்று இயக்க இயல் பொருள்முதல்வாதம் கருதுகிறது. மத மூட நம்பிக்கையான கருத்துமுதல்வாதத் தத்துவம் எல்லையில்லாத சிக்கல் நிறைந்த அறிவின் சாயலில் ஒன்றின் மூலமாக, மத மூடநம்பிக்கைக்கு இட்டுச் செல்லும் பகுதியாக உள்ளது — இந்த லெனினுடைய வரையறுப்பைக் காட்டி, மனித சிந்தனையில் கருத்துமுதல்வாதத்தின் பங்கை மார்க்ஸ், எங்கெல்சைப்



படிப்பகம்

www.padippakam.com

போலவே லெனினும் மதித்தார் என்கிறார் நம்பூதிரி.

இங்கே கருத்துமுதல்வாதம் பற்றிய இயக்க மறுப்புநிலை மற்றும் இயக்க இயல் நிலை எடுக்கும் பொருள்முதல்வாதிகளின் மாறுப்பட்ட, கண்ணோட்டங்களைத் தான்லெனின் விளக்குகிறார். இது எப்படி மனித சிந்தனையில் கருத்து முதல்வாதத்தின் பங்கை மதிப்பதாகும்? இதை வைத்து ஃபயர்பாகின் இயக்க மறுப்பு நிலை பொருள்முதல்வாதத்தை விட ஹெகலின் இயக்க இயல் கருத்துமுதல்வாதம் மனித சிந்தனையின் வளர்ச்சியில் மேலான பங்கு வகிப்பதாக மார்க்சிய லெனினிய ஆசான்கள் மதிக்கின்றனர் என்று நம்பூதிரி புளுகுகிறார். ஹெகலின் கருத்துமுதல்வாதத்தை நிராகரித்து இயக்க இயல் அணுகு முறையையும், ஃபாயர்பாகின் இயக்க மறுப்பு நிலையை நிராகரித்து பொருள்முதல்வாதத்தையும் எடுத்து செழுமைப்படுத்தி இயக்க இயல் பொருள்முதல்வாதத் தத்துவத்தை உருவாக்கினார் என்பதுதான் உண்மை. ஆனால் ஹெகலின் கருத்துமுதல்வாதத்தைப் போலவே ஃபாயர்பாகின் பொருள் முதல்வாதத்தையும் நிராகரித்து வந்ததுதான் இயக்க இயல்பொருள்முதல்வாதம் என்று பச்சையாகப் புளுகுகிறார் நம்பூதிரி (மேற்படி பக்: 2).

அதே சமயம் ஆதிசங்கரனின் தத்துவத்தை இவ்வளவு தூரம் ஏற்றிப் போற்றும் நம்பூதிரி, அது ஹெகலியத் தத்துவத்தைப் போல இயக்க இயல் அடிப்படையிலானது என்று எங்கேயும் கூறவோ, நிரூபிக்கவோ முயலவில்லை. ஆகவே அதில் மதிக்கத்தக்க அம்சம் எதுவுமே கிடையாது என்பதுதான் உண்மை. ஆனால், சங்கரனின் தத்துவம் இன்றைய காலத்துக்கும், இடத்துக்கும் ஏற்புடையதல்ல; அதையும் இந்து மறுமலர்ச்சியாளர்களையும், வேத உபநிடத உணர்வுகளுக்கு எதிராகவும் போராடுவதன் அவசியத்தை ஒருபுறம் குறிப்பிட்டாலும், அடுத்த மறுபுறம் பின்வருமாறு எழுதுகிறார் நம்பூதிரி.

''எனினும், இதைச் செய்யும்போது மார்க்சிய லெனினிஸ்டுகளாகிய நாம், எப்பொழுதும் கருத்துமுதல்வாதக் குழுக்களின் பிரதிநிதியாக விளங்கிய சங்கரர் மற்றும் கருத்துமுதல்வாத பிரிவினரின் கோட்பாடுகள் அனைத்தையும் மறுக்கும் போக்கினைப் பின்பற்றக்கூடாது. இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பல மார்க்சிய அறிஞர்கள் இந்தத் தவறை செய்திருக்கிறார்கள்'', என்கிறார் நம்பூதிரி.

இதைத் தொடர்ந்து ஒரு சோவியத் திருத்தல்வாதியின் பின்வரும் கூற்றை தனக்கு ஆதரவு வாதமாக வைக்கிறார். ''சில மார்க்சிய அறிஞர்கள் அடிக்கடி பொருள்முதல்வாதத்துடன், பிராம்மண எதிர்ப்பு மனோபாவம், அல்லது 'விடுதலை' (ஆன்மா) தத்துவத்தை நிராகரிப்பது போன்ற பொருள் முதல்வாதம் இல்லாத தத்துவங்களை இணைத்துப் பார்க்கிறார்கள்... லோகாயத தத்துவம் ஒருதலைப்பட்சமாக மேல்மட்டத்திற்கு தள்ளப்பட்டு அதே நேரத்தில் வேதாந்த தத்துவம் ஏழாவதாகவும், கடைசியாகவும் வைக்கப்பட்டுள்ளது'' என்று சொல்கிறார்.

இந்த ஆசிரியர், ''வேதாந்தம் அன்றும் இன்றும் இந்தியத் தத்துவங்களிலேயே செல்வாக்கு படைத்தது. மேலும் சங்கரர், இந்திய தத்துவத்தில், ஏறக்குறைய மேற்கு ஐரோப்பிய தத்துவங்களில் பிளாட்டோவின் தத்துவம் பெற்றிருக்கும் இடத்தை, பெற்றிருக்கிறார்'' என்று கூறுகிறார். (அக்'89 மார்க்சிஸ்ட் பக்: 12-13)



இப்படிப் போலிகளினால் போற்றப்படும் ஆதிசங்கரனின் அத்வைதமோ, பிற பிரம்ம சூத்திர, ஆன்ம தத்துவங்களோ உலகிலேயே தனிச்சிறப்பானவையா என்றால் எதுவும் கிடையாது. போலி மார்க்சிஸ்டுகளே ஒப்புக் கொண்டுள்ளவாறு ஆதி சங்கரனின் அத்வைத தத்துவம் என்பது ஆரிய-பார்ப்பன சனாதன அமைப்பை உருவாக்கிக் காத்துக் கொள்வதற்காக வேதங்கள், உபநிடதங்கள், பிராமணங்கள், ஆரணியங்கள், இதிகாச-புராணங்கள், இறுதியாக வேதாந்தங்கள் ஆகியவற்றின் மூலத்தத்துவமான பிரம்ம சூத்திரத்தின் புதிய விளக்கம் தான். இவற்றுக்கெதிராக லோகாயதம், சார்வாகம், ஆஜீவகம், பௌத்தம், சமணம் ஆகிய பொருள்முதல்வாதம் மற்றும் பார்ப்பன எதிர்ப்பு மதங்களின் தாக்குதலால் சனாதன வருணாசிரமம், சாதிய அமைப்பு ஆட்டங்கண்டபோது அதற்கு முட்டுக் கொடுத்துப் புத்துயிர் ஊட்டுவதற்காக பல்வேறு தத்துவப்பித்தலாட்டங்கள், அரசியல் சூழ்ச்சி மோசடிகள், அராஜக - அடாவடிகள், ஆளுவோரின் துணையுடன் கூடிய அக்கிரமங்கள், அடக்குமுறைகள் மூலமாக நிறுவப்பட்டதுதான் சங்கரனின் அத்வைதத் தத்துவம். இவற்றையெல்லாம் மிகவிரிவாகவும், ஆழமாகவும், ஆதாரத்துடனும் தேவி பிரசாத் சட்டோபாத்யாயாவின் ஆய்வுகள் நிரூபித்துள்ளன.

ஆகவே, போலி மார்க்சிஸ்டுகள் வாதிடுவதைப் போல ஆதிசங்கரன் தனது அசாதாரணத் திறமையினாலோ, அறிவு ஆழத்தினாலோ, வெற்றி ஈட்டிடவில்லை. ஆதிசங்கரனின் அத்வைத தத்துவம் என்பது அறிவுத் தெளிவு பெறுவதற்கான எல்லா முயற்சிகளையும் தடுத்து மனித உடற்கூறுகளுக்கும் புலனுணர்ச்சிக்கும் - சிந்தனைக்கும் இடையிலான இயக்க இயல் உறவை பற்றிய அறியாமையை ஆதாயமாகக் கொண்டு, அதை மேலும் குட்சுமப்படுத்தி தமது சனாதன சுயநலன்களுக்குப் பயன்படுத்திக் கொள்வதுதான்.

இதைப் பின்வருமாறு எங்கெல்சு விளக்குகிறார்: ''....எல்லாத் தத்துவ ஞானத்துக்கும் — குறிப்பாக நவீன காலத்திய தத்தவ ஞானத்துக்கும் — அடிப்படையான மாபெரும் பிரச்சனை, சிந்தனைக்கும் வாழ்நிலைக்குமுள்ள உறவு பற்றிய பிரச்சனையாகும். மிகப் பழங்காலத்திலிருந்தே மனிதர்கள் தங்களுடைய உடலின் கட்டுமானத்தைப் பற்றி ஒன்றும் அறியாதிருந்த போது, கனவுகளுக்குக் காரணம் விளங்காத போது, தமது சிந்தனையும், புலனுணர்ச்சியும் தமது உடலின் நடவடிக்கைகள் அல்லவென்றும், உடம்பில் தங்கியிருந்து சாவுக்குப் பின் வெளியேறி விடுகிற ஒரு தனிவேறான ஆன்மாவின் நடவடிக்கைகளே என்றும் நம்பத் தொடங்கிய போது இந்த ஆன்மாவுக்கும் வெளியுலகத்துக்கும் இடையேயுள்ள உறவு பற்றி சிந்தித்துப் பார்க்கும் கட்டாயத்துக்கு ஆளானார்கள்.

சாவுக்குப் பின் உடலை விட்டு வெளியேறி, ஆன்மா தொடர்ந்து வாழ்கிறதென்றால், அதற்கென்று ஒரு தனி வேறான சாவைப் புனைவதற்கான சந்



படிப்பகம்

www.padippakam.com

தார்ப்பம் இருக்கவில்லை. இவ்வழியே தான் அதன் சாகா நிலை பற்றிய கருத்து உதித்தது. இக்கருத்து அந்த வளர்ச்சிக் கட்டத்தில் ஓர் ஆறுதலாக நிச்சயமாகத் தோன்றவில்லை. எதிர்த்துப் போராடுவதால் பயனில்லை என்று அமைந்த ஒரு தலைவிதியாகவும், அடிக்கடி (கிரேக்கர்கள் கருதியதுபோல்) நேருறுதியான துரதிர்ஷ்டமாகவும் அது தோன்றியது.

ஆன்மா ஒன்று இருக்கிறதாக ஒப்புக் கொண்டு விட்டால், பிறகு உடல் மாண்டபின் இந்த ஆன்மா எங்கே போய் ஒளிந்து கொள்கிறது என்று தமக்குத் தாமே விளக்கிக் கொள்ள முடியாமல் இருந்த, எங்கும் நிலவிய அறியாமை தான் தனி நபர் வகைப்பட்ட அமர நிலை பற்றி சலிப்பூட்டும் எண்ணப் போக்குக்குப் பொதுவான வழியில் கொண்டு சென்றதே ஒழிய, மன ஆறுதலுக்கான மத விருப்பம் அல்ல. இதே போன்ற முறையிலேதான் இயற்கைச் சக்திகளை உருவகப்படுத்துவதின் மூலமாக முதன் முதலாக கடவுளர்கள் தோன்றினர். சமயங்கள் மேன்மேலும் வளர்ச்சி பெற்றதையொட்டி இக்கடவுளர்கள் மேன்மேலும் உலகியலுக்கு அப்பாற்பட்ட வடிவம் எடுத்துக் கொண்டு, மனிதரின அறிவு வளர்ச்சிப் போக்கில் இயற்கையாக நடந்து வரும் சூட்சுமப்படுத்தும் ஒரு நிகழ்வுப் போக்கின் மூலமாக — வடிகட்டி இறக்கு நிகழ்வுப் போக்கு மூலமாக என்றுகூட அனேகமாக நான் சொல்லக்கூடும் — இறுதியில் ஏறத்தாழ வரம்பிட்ட மூர்த்தியுடைய, ஒருவருக்கொருவர் வரம்பிட்டுக் கொள்கிற பல கடவுளர்களிடையேயிருந்து ஒன்றே கடவுள் என்று சொல்லும் சமயங்களின் தனியொரு கடவுள் பற்றிய கருத்து மனிதர்களின் மனத்திலே உதித்தது....

(லுத்விக் ஃபாயர்பாகும் மூலச் சிறப்புள்ள ஜெர்மன் தத்துவ ஞானத்தின் முடிவும் - பக் 28, 29), (மார்க்சிஸ்ட் '94 ஜூன் பக். 58-59).

இதைக் கூட சங்கரன் சுயமான மூல அறிவைக் கொண்டு செய்யவில்லை. அப்போது உருவாகியிருந்த கிறித்தவ, இசுலாமியர்களின் ஓரிறை என்ற தத்தவ நம்பிக்கையைத் திருடிக் கொண்டார். வருண-சாதி அமைப்பினால் வெறுப்புற்று ஆரிய - பார்ப்பன சனாதனத்தை எதிர்த்துப் போராடிய சக்திகளை இழுப்பதற்காக, காளி, மாரி, துர்க்கை முதல்பெரியபாளையத்தம்மன், துலுக்காணத்தம்மன் உட்பட எல்லாம் சக்தியின் வடிவம் என்றும் அவதாரக் கதைகளைப் புனைந்தும், ஒன்றே கடவுள் - அது பிரம்மம் என்றும் மாயாவாத அத்வைத - ஆன்மா பற்றிய கோட்பாட்டை முன்னிறுத்தியும் தத்துவ மோசடி செய்தார்; அதை நிலை நாட்டுவதற்கும் அனைத்து அதர்ம வழிகளையும் பின்பற்றினார்.

ஆரிய-பார்ப்பன சனாதன பிரம்ம சூத்திரத்தத்துவத்தை எதிர்த்து போராடி, நிலை குலையச் செய்த சார்வாகம், ஆஜீவகம், பௌத்தம், சமணம் போன்ற தத்துவங்களையெல்லாம் அடக்குமுறை, அராஜகம், அக்கிரம வழிகளிலோ அல்லது எதிராளிகளின் தத்துவக் கோட்பாடுகளைத் திரித்தும், ஊடுருவிச் சிதைத்தும், மக்களை ஈர்த்த அவற்றின் முக்கிய அம்சங்களைத் திருடியும் இந்து மதம் தன்னைக் காத்துக் கொண்டது. இந்திய தத்துவ வரலாறு என்பதே இப்படி முரண்பட்ட, எதிரெதிரான இரண்டு வருண - சாதீய - வர்க்கப் பிரிவுகளுக்கிடையிலான போராட்டங்கள் நிறைந்ததுதான். இந்த உண்மையையும் ஒப்புக் கொண்டு திரித்துச் சொல்லுகிறார்கள், போலிமார்க்சிஸ்டுகள். அவை: ஆதிமுதல் வேதமாகிய ரிக் வேதத்தில் மாயாவாதத்தத்துவம் இல்லை; தெய்வீக சக்தியுடையதெனக் கருதப்பட்ட இயற்கை வழிபாடுதான் இருக்கிறது; அதில் நால்வருண சாதியப் பாகுபாடு கிடையாது; அதன் இறுதியில் யாராலேயோ ''புருஷ சூக்தம்'' என்கிற நால்வருண விளக்கம் புகுத்தப்பட்டுவிட்டது. அந்த வேதமும், வால்மீகி இராமாயணமும் மதநூல்களல்ல; மிகச்சிறந்த இலக்கியங்கள்தாம் என்கின்றனர் போலி மார்க்சிஸ்டுகள்.

> புலனுணர்ச்சிக்கும் சிந்தனைக்குமிடையிலான உறவை சூட்சுமப்படுத்தி தனது சநாதன நலன்களுக்குப் பயன்படுத்திக் கொண்டதுதான் சங்கரனின் தத்துவம். இதைக் கூட சங்கரன் சுயமாகச் செய்யவில்லை. அப்போது உருவாக்கியிருந்த கிறித்துவ, இசுலாமிய ஓரிறைக் கோட்பாட்டைத் திருடியும், பார்ப்பனீயத்தை எதிர்த்தோரின் கடவுளர்களையும் தனது பிடியில் கொண்டுவர அவதாரக் கதைகளைப் புனைந்தும்தான் செய்தார்.

வேத, உபநிடத, வேதாந்த, பிராமண, ஆரண்ய, புராண - இதிகாசங்களில் உள்ள கருத்துமுதல்வாதம் தோன்றியபோதே, அதற்கு எதிரான லோகாயதம், சார்வாகம், சாங்கியம் வைசேடிகம், ஆஜீவகம் போன்ற பொருள்முதல்வாதமும் தோன்றிவிட்டது; இவை வேதங்களிலும், உபநிடதங்களிலும் வேதாந்தங்களிலும் அடங்கியுள்ளன; அதாவது அவற்றின் ஒரு பகுதியாக உள்ளன. வேத உபநிடதகால ரிஷிகளே, ஆரிய - பிராமண முனிவர்களே பொருள்முதல்வாதத்தையும் உருவாக்கி வளர்த்தனர் என்று பச்சையாகப் புளுகுகின்றனர். ('93 ஜூலை மார்க்சிஸ்டு பக் 35-40, 93'டிச. மார்க்சிஸ்ட் பக்: 31-33)

ஆனால், ''லோகாயத - சார்வாகர்கள்'' முதலிய பொருள்முதல்வாதத் தத்துவவாதிகளும், அவர்களது சிந்தனைகள் அடங்கிய நூல்களும் பார்ப்பன ஆதிக்கத்திலிருந்த அரசு அதிகாரத்தினால் முற்றாக அழிக்கப்பட்டன, ஆதிசங்கரன் போன்ற தத்துவவாதிகள், வேத, உபநிடதங்கள் போன்ற நூல்கள் தமது சனாதன வாதங்களை நியாயப்படுத்துவதற்காக எதிர்த்தரப்பு என்ற முறையில் குறிப்பிட்டுள்ள ஆதாரங்களில் இருந்துதான் அடக்கப்பட்ட, ஒழிக்கப்பட்ட பொருள்முதல்வாத சிந்தனை பற்றிய ஆதாரங்கள் கிடைக்கின்றன. அதேபோல ஆரிய-பார்ப்பன சனாதனத் தத்துவம் தோன்றுவதற்கு முன்பே இங்கு நிலவிய புராதனப் பொருள்முதல்வாதத் தத்துவமும் ஆரியப் படையெடுப்பினாலும் அழிக்கப்பட்டன என்று தேவி பிரசாத் சட்டோபாத்தியாயா நிரூபித்துள்ளார். ''பண்டைய இந்தியாவின் பொருள்முதல்வாதத்துக்கு ஆதரவாக'' ''இந்தியத் தத்தவத்தில் நிலைத்திருப்பதும் மறைந்து போனதும் என்ன?'' ''இந்தியப் பொருள் முதல்வாதம் பற்றிய மேலும் சில ஆய்வுகள்'' ''பண்டைய இந்தியாவில் மருத்துவ அறிவியல்'' ''பண்டைய இந்தியாவின் அறிவியல் தொழில் நுட்ப வரலாறு'' ''ஒவ்வொரு மனிதனுக்குமான பூவுலகத் தத்துவம்'' ஆகிய தொடர்ச்சியான ஆய்வு நூல்கள் மூலம் லோகாயதர்கள் — சாருவாகர்கள் போன்ற பொருள்முதல்வாதிகளின் தத்துவங்களை ஒழித்துக்கட்டுவதற்கு சங்கரன் முதலிய ஆரிய பார்ப்பன சனாதனங்கள் செய்த இழிசெயல்கள், சூழ்ச்சிகளை தேவிபிரசாத் சட்டோபாத்யாயா அம்பலபடுத்தியுள்ளார்.

ஆனால், இத்தகைய ஆய்வாளர்களின் பெயர்களையும், மேற்கோள்களையும் உச்சாடனம் செய்து கொண்டே, ஆதிசங்கரன் முன்பு செய்ததைப் போல பல்வேறு திரிபுகள், சூழ்ச்சிகள் மூலம் இந்திய உழைக்கும் மக்களை ஏமாற்றுமுயலுகிறார்கள் சங்கரன் நம்பூதிரியும் அவரது சீடர்களும். நேரடியான, அப்பட்டமான எதிரிகளைவிட, முடிமறைக்கப்பட்ட கபட வேடதாரிகளான இவர்கள்தாம் லெனின் சொன்னதைப் போல மிகவும் அபாயகரமானவர்கள்; அம்பலப்படுத்தி முறியடிக்கப்பட வேண்டியவர்கள்.

—முற்றும்



படிப்பகம்

www.padippakam.com

## 'திருடு போனதடா'

'மார்க்சிஸ்டு' கட்சியினர், நாம் வெளியிட்டுள்ள 'இருண்ட காலம், அசுர கானம்', - ஒலிப்பேழைகளிலிருந்து பாடல்களை எடுத்து, வரிகளை மாற்றி, தமது பாடல்கள் என சித்தரித்துப் பாடி வருவதைக் கண்டித்து நாம் 'அடிமைச் சாசனம்' ஒலிப்பேழையில் அறிவிப்பு செய்திருந்தோம். வேறெந்தக் கட்சியும் இந்தக் கீழ்த்தரமான வேலையைச் செய்வதில்லை என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும். ஜேப்படித் திருடனின் புகைப்படத்தை மூலைக்கு மூலை ஒட்டி அறிவிப்பு செய்திருந்தாலும், அவன் தன் தொழிலை நிறுத்துவதில்லை.

திருச்சி மாவட்டம், பெரம்பலூரில், கடந்த 4.2.95 சனிக்கிழமையன்று மாலை, தமிழக முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நடத்திய 'முப்பெரும் விழாவில்' திருச்சி 'வெண்மணி' கலைக்குழுவின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் நாம் வெளியிட்டுள்ள 'அடிமைச் சாசனம்' ஒலிப்பேழையிலிருந்து 'கொள்ளையோ கொள்ளை' கஞ்சி ஊத்த வக்கில்லே' என்ற பாடல்களையும், 'இருண்ட காலம்' ஒலிப்பேழையிலிருந்து, 'அடகு போனதடா' என்ற பாடலையும் அவர்களது பாடல்கள் என சித்தரித்தும், பாடல் - வரிகளை மாற்றியும் பாடினர் என்று நம் வாசகர் ஒருவர் கடிதம் எழுதியுள்ளார்.

இப்படி நமது பாடல்களை 'திருடுவது' கிடக்கட்டும் 'மார்க்சிஸ்டுகள்' தமது அரசியலுக்கு தொடர்பில்லாத நமது பாடல்களை எப்படிப் பாடுகிறார்கள்? 'மூத்த தலைவர்' ஜோதிபாசு, மேற்கு வங்கத்தில் அந்நிய முதலாளிகளுக்கு பட்டுக் கம்பளம் விரித்து பாத பூசை செய்து வரும் இவ்வேளையில் 'அடகு போனதடா' என்று பாடுவது கொள்கைக்கு விரோதமாயிற்றே. பன்னாட்டு நிறுவனங்கள் கோபித்துக் கொள்ள மாட்டார்களா? தங்கள் கட்சித் தலைமையிடம் எதற்கும் ஒரு வார்த்தை கேட்டுக் கொள்வது வெண்மணி கலைக்குழுவுக்கு நல்லது.

ஒரு சிறிய வேண்டுகோள். வெண்மணி என்பது தியாகத்தின் அடையாளம். திருட்டின் அடையாளம் கோபால கிருஷ்ண நாயுடு. அவன் பெயரில் கலைக்குழு வைத்துக் கொள்வதுதான் உங்கள் தொழிலுக்குப் பொருத்தமானது.

வாசகர் தகவல் : இரா.ஸ்டாலின்
பெரம்பலூர்.

## காவிக்கொடியை எதிர்த்து கருப்புக்கொடி!

ஓடிப்போன சங்கராச்சாரியும், எம்.டி.வி ரசிகரான இளைய சங்கராச்சா ரியும் பிப்ரவரி- 26 அன்று மாலை திடீ ரென சென்னை, சேத்துப்பட்டு தாழ்த்தப் பட்டோர் குடியிருப்புப் பகுதிக்குள் தங் கள் பரிவாரங்களுடன் நுழைந்தனர். "ஜெய ஜெய சங்கர ஹர ஹர சங்கர" என்ற கூச்சலைக் கேட்ட ம.க.இ.க., பு.மா.இ.மு. தோழர்கள் — சத்யா, கில் பர்ட், பீட்டர் — உடனே ஒரு கருப்புக் கொடியுடன் வந்து வண்டியை மறித்து சங்கராச்சாரியை எதிர்த்து முழக்கமிட்ட னர்.

முற்றும் துறந்த முனிவர்களுக்குக் காவலிருந்த போலீசார் குண்டுக்கட்டா கத் தோழர்களை சேத்துப்பட்டு காவல் நிலையத்துக்கு தூக்கிச் சென்றனர். அதற் குள் மக்கள் கூடிவிடவே மானமிழந்த 'முனிவர்' வேனுக்கு வெளியே தலை காட்டாமல் முக்காடு போட்டபடியே இடத்தை காலிசெய்தார்.

கைது செய்த தோழர்களை விடுவிக் கக் கோரி பகுதியிலிருந்த இளைஞர்க ளும், பெண்களும் திரண்டு சென்று காவல் நிலையத்தின் முன்னே ஆர்ப்பாட் டம் செய்தனர். மறுநாள் வழக்கு பதிவு செய்து அவர்களை மத்திய சிறைக்கு அனுப்பிவிட்டது போலீசு.

எழும்பூர் நீதிமன்ற வளாகத்திலும் ம.க.இ.க., பு.மா.இ.மு. தோழர்கள் ஆர்ப் பாட்டம் செய்து விளக்கவுரை ஆற்றினர். வழக்கறிஞர்கள் பலர் ஆதரவும், நன்கொ டையும் அளித்தனர்.

26-ம் தேதி இரவு தோழர்களைக் காவல் நிலையத்தில் வைத்திருந்த போது அங்கிருந்த வயர்லெஸ்ஸில் "பெரிய வாளை மறிச்சுட்டானா? என்ன பண் ணிண்டிருந்தேள் எல்லாரும்? ஏதாவது முட்டைய கிட்டைய எடுத்து அடிச்சிருந் தான்னா என்ன ஆகறது?" — என்று பதறியது ஒரு குரல்.

அடடா, அதுவும் நல்ல யோசனைதான்!

## நாடு மீண்டும் காலனியாவதைத் தடுப்போம்



**1995,மே 1 சீர்காழி**

## இறால் பண்ணை அழிப்புப் போராட்டம்

விவசாயிகள் விடுதலை முன்னணி
புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி
மக்கள் கலை இலக்கியக் கழகம்
தமிழ்நாடு.

வாசகர்கள், முகவர்கள் கவனத்திற்கு:

## முகவரி மாற்றம்

புதிய கலாச்சாரம் இதழின் தொடர்பு முகவரியாகவும், மக்கள் கலை இலக்கியக் கழகம், தமிழ்நாட்டின் அலுவலகமாகவும் இருந்த 45, செங்குன்றம் சாலை, வில்லிவாக்கம், சென்னை-49 என்ற முகவரி மாற்றப் பட்டுள்ளது.

புதியகலாச்சாரம் இதழுக்கு சந்தா, படைப்புகள், கடிதங்கள் மற்றும் விற்பனைத் தொகை அனுப்புவதற்கும்,

மக்கள் கலை இலக்கியக் கழகம், தமிழ்நாட்டின் மாநிலத் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்வதற்கும் இனி கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்:

இரா. சீனிவாசன்
3, செகன்னாதபுரம் 4-வது தெரு,
சேத்துப்பட்டு,
சென்னை - 600 031.

படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் மக்கள் இசையை நோக்கி...





தமிழ் மக்கள் இசை விழா
திரண்டிருந்த மக்கள் கூட்டம்

தமிழிசை மூலத்திலிருந்து களவாடி உருவாக்கப்பட்டதுதான் கருநாடக இசை என்ற வரலாற்று உண்மையை நிறுவுவதுடன் நம் பணி முடிவடைந்து விடுவதில்லை. தமிழ் மக்கள் இசையைப் படைக்கின்ற, வளர்க்கின்ற பணியும் நம் முன் நிற்கிறது.

கருநாடக இசை தேக்கத்திலும் நெருக்கடியிலும் சிக்கியுள்ளது என்பதை நாம் புதிதாகக் கண்டுபிடித்துக் கூற வேண்டியதில்லை. அவர்களது இசை விமரிசகர் சுப்புடு முதல் இசைப் பத்திரிகையான 'சுருதி' வரை அனைவரும் ஒப்புக் கொள்ளும் உண்மைதான் அது.

இசையை ஆன்மீகத்தில் முளையடித்து இழுத்துக் கட்டியதுதான் இந்த நெருக்கடிக்குக் காரணம்.

''மனசுக்கு உற்சாகத்தைக் கொடுத்து அதனாலேயே சிரமமான சரீர உழைப்பையும் சுலபமாக்கித் தருகிற ஆற்றல் இசைக்கு இருப்பது போலவே, எந்த உணர்ச்சியானாலும் அதை நன்றாகக் கிளறிவிட்டு, நம் மனஸை விட்டுக் கொடுக்கும்படி பண்ணி, இதனால் அப்புறம் சாந்தியை உண்டாக்கும் ஆற்றலும் அதற்கு இருக்கிறது... தியாகையர்வாள் ''சாந்தமுலேக சௌக்யமு லேது'' என்று பாடினதால், சாந்தம்தான் சங்கீதத்தின் நிறைவான குறிக்கோள் என்று தெரிகிறது. ஈஸ்வர ஸ்மரணம்தான் (இறைவனை எண்ணுதல்தான்) அப்படிப்பட்ட நித்யமான சாந்தத்தைக் கொடுக்க வல்லதாகையால் சங்கீதம் பரமாத்மாவை மையமாகக் கொண்டதாகவே நம்முடைய உயர்ந்த சம்பிரதாயத்தில் நெடுங்காலமாகவே வந்திருக்கிறது''

— சங்கராச்சாரியார் அருள் உரை

கருநாடக இசை இலக்கணத்தைக் கூறும் சங்கீத ரத்னாகரம் எனும் நூலும் ''இசையின் நோக்கம் மகிழ்விப்பதல்ல, ஆன்ம விடுதலையே'' (முக்தி தாயகம் நது ரஞ்சகம்) என்று வரையறுக்கிறது. இதைச் சொல்லித்தான் தங்கள் இசையின் மேன்மையை அவர்கள் பெரிதும் கொண்டாடிக் கொள்கிறார்கள்.

அவர்களின் கூற்றுப்படி ஆன்ம விடுதலை ஒன்றையே இலட்சியமாகக் கொண்ட இசையில் நாட்பட நாட்பட உணர்ச்சி ஏன் செத்துப் போக வேண்டும்?

### மதமும் இசையும்

செத்துக் கொண்டிருப்பது ஆன்மீக உணர்ச்சியா, அதனைத் தோற்றுவிக்க வல்ல இசையா? இன்றைய சமூக வாழ்க்கை, மற்றும் அது தோற்றுவிக்கின்ற உணர்ச்சிக் கலவைகளை சந்திக்க முடியாமல் கருநாடக இசை தடுமாறுகிறது; மதமும் தடுமாறுகிறது. ''காலை முழுதும் பரபரப்பு மாலையின் மன அமைதிக்குக் கோயில் அல்லது இசை'' - என்று ஒரு புதிய கோட்பாட்டை உருவாக்கிச் சமாளிக்க முயன்றார்கள், முடியவில்லை. 'சாந்தப் படுத்துகின்ற' மதம் அல்லது இசை என்ற போதை மருந்தின் (Tranquiliser) ஆற்றலை, உலகாயத வாழ்க்கை தோற்றுவிக்கும் பதற்றமும், வெறியும் விஞ்சிவிட்டன.

பழைய மருந்துக்கு அடங்க மறுக்கும் இந்தக் கிருமிகளை வெல்வதற்கு மருந்தின் வலிமையைக் கூட்டவேண்டியுள்ளது.

பரலோகம், சொர்க்கம், அடுத்த பிறவி என்ற கதையையெல்லாம் நம்பிக் காத்திருக்க பக்தர்களின் வாழ்க்கை அவர்களை அனுமதிக்கவில்லை. உடனே மதம் உடனடி நிவாரணம் தரும் ஆஸ்ப்ரோவாக - சாயிபாபாவாக, சுரண்டும் லாட்டரியாக - பிரேமானந்தாவாக புது அவதாரம் எடுக்கிறது.

மதத்திற்கு என்ன நேர்ந்ததோ அதுவேதான் கர்நாடக இசைக்கும் நேர்ந்திருக்கிறது. பணத்தின் பிடியிலிருந்து மனத்தை விடுவிக்கப் புறப்பட்ட இசை சில்லறையின் ஒலியுடன் சுருதி சேர்கிறது. இருக்கின்ற பாடகர்களில் யார் ஆன்ம சாந்தியை அளிக்கவல்ல பாடகரோ அவருடைய கச்சேரிக்கு ஆகும் செலவை நாங்கள் ஒத்துக் கொள்கிறோம் (Sponsorship) என்று எந்த தொழில் நிறுவனமும் முன்வருவதில்லை. ''கம்பெனி விளம்பரத்துக்கு கூட்டம் சேர்க்கக் கூடிய 'திறமை' உள்ள பாடகர்களைத்தான் அவர்கள் தேடுகிறார்கள்.

ஆலாபனை, சுரம், நிரவல், தனி ஆவர்த்தனம் ஆகிய அனைத்துமடங்கிய கச்சேரியை நம்மாட்களாலும் நடத்த முடியும் என்று நிரூபிக்கப் போகிறார்களாம் சில பகுத்தறிவாளர்கள். யாருக்கு? பார்ப்பனர்களுக்குத்தான். கடைசியில் 'அவாள்' வாயால் பிரம்மரிஷிப் பட்டம் வாங்கத்தானா இத்தனை கவாத்து வேலைகளும்?



படிப்பகம்

www.padippakam.com

மொழியின் நீட்சி மட்டுமல்ல, மொழியைக் கடந்தும் வெளிப்படுகின்ற உணர்ச்சியே இசை. காலத்தின் தேவைக் கேற்பத் தன்னைப் புனரமைத்துக் கொள்ள மறுக்கும் மொழி அழிவதைப் போலவே அத்தகைய இசையும் அழியும். அதன் நுட்பமான வடிவம் காரணமாகவும் வேறு சில காரணங்களாலும் ஒருவேளை தனது மரணத்தை அது ஒத்திப் போடலாம்; ஆனால் தடுக்க முடியாது.

தெய்வீகத் தாயத்து கட்டப்பட்ட சமஸ்கிருதம் வழக்கொழிந்து புரோகித மொழியாக மட்டும் எஞ்சியிருப்பதற்கு இதுவே காரணம். சமஸ்கிருதத்திற்குப் பொருந்தும் விதி "ஆத்தும சுகமளிக்கு மாறு' விதிக்கப்பட்ட கருநாடக இசைக்கும் பொருந்தும்.

**ஒளிவட்டத்தின் இருட்டு!**

சநாதனிகளின் பேராசையோ அளவு கடந்தது. அவர்களுக்கு சமஸ்கிருதம் மற்றும் கருநாடக இசையின் புனிதமும் நீடிக்க வேண்டும்; வழக்கொழிந்து போவதிலிருந்து அவற்றைக் காப்பாற்றவும் வேண்டும். உலகியல் இன்பங்களை ஒன்று விடாமல் துய்க்க வேண்டும். அதே நேரத்தில் தலைக்குப் பின்னால் அரை அங்குலம் தள்ளி ஒரு ஒளி வட்டமும் சுற்றிக் கொண்டிருக்க வேண்டும். சிற்றின்பத்தை அனுபவிக்க வேண்டும். ஆனால் பேரின்பப் பெருவெளியில் மிதப்பவரைப் போலத் தோற்றம் தர வேண்டும்.

இந்த இரண்டு ஆசைகளையும் நிறைவேற்றிக் கொள்ள அவர்கள் ஒரே நேரத்தில் கூச்சலிடும்போது அதில் அபசுரம் தட்டத்தானே செய்யும். இந்த அபசுரத்துக்கு ஒரு உதாரணம்தான் தியாகய்யர் கீர்த்தனங்களின் ராகங்களை மாற்றியதற்காக, இளையராஜா சாடப்பட்ட விவகாரம். ஒளி வட்டத்தின் புனிதத் திமிரிலிருந்து தோன்றிய விமரிசனம் இது.

காசுக்கு இசையை விற்க மறுத்த தியாகய்யரின் "கொள்கையையும்" இத்தகைய கொள்கை தோன்றுவதற்கு அடிப்படையாகவுள்ள "இசை ஆன்மீக நோக்கத்திற்கானது" என்ற இலட்சியத்தையும், தங்கள் நடைமுறையில் குழிதோண்டிப் புதைத்துவிட்டவர்கள் ராகத்தின் உணர்ச்சியை மாற்றியதற்காக ஏன் கூச்சலிட வேண்டும்? காசு வாங்கிக் கொண்டு 'நிதி சால சுகமா' என்று பாடலாம்; ஆனால் அதன் ராகத்தை மாற்றுவதுதான் கொலைக்குற்றமா?

**தமிழிசை காத்த வீராங்கனை!**

"மாற்றலாம்; தவறில்லை. இல்லையேல் இசை முன்னேறாது" என்கிறது இன்னொரு பிரிவு. முற்போக்கு போலத் தன்னைக் காட்டிக் கொள்ளும் இந்தப் பிரிவுதான் புறநானூறு அபிராமி அந்தாதி குற்றாலக் குறவஞ்சி போன்ற தமிழ் இலக்கியங்களுக்கெல்லாம் இசையமைத்து நடனமாக அரங்கேற்றுகிறது.

பாரதிய ஜனதாவின் இந்து ராஷ்டிரத்துக்கும் காங்கிரசின் மதச்சார்பின்மைக்கும் உள்ளடக்கத்தில் எப்படி எவ்வித வேறுபாடும் இல்லையோ அதே போல இவ்விரு பிரிவினர்க்கும் நோக்கத்தில் வேறுபாடு கிடையாது. வழிமுறையில் தான் கருத்து வேற்றுமை. உண்மையில் இந்தப் பிரிவுதான் பெரிதும் நரித்தனமானது. "தேவாரம் முதல் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் வரை அனைத்துத் தமிழிலக்கியங்களையும் அதற்குரிய பண்களில் இசையமைத்து வெளியிட வேண்டும்" என்ற ஜெயலலிதாவின் சமீபத்திய அறிவிப்பு மேற்கூறிய ரகத்தைச் சார்ந்ததுதான். இருந்தாலும் 'தமிழிசை காத்த வீராங்கனை' என்ற பட்டம் எங்கே யாவது தயாராகிக் கொண்டிருக்கும் சாத்தியக்கூறுகளையும் நாம் மறுக்க முடியாது.

> **தமிழினத்தின் இசை மரபில் எதை எடுத்துக் கொள்வது எதைக் கைவிடுவது என்பதில் இருவேறு கண்ணோட்டங்கள் உள்ளன. எதிலே காலூன்றி நிற்கப் போகிறோம்? உழைக்கும் மக்களின் உயிர்த்துடிப்புள்ள இசை மரபிலா? உயிர்த்துடிப்பை சமனம் செய்வதற்காகவே உருவாக்கப்பட்ட இசை மரபிலா?**

**பாசறைக்குள்ளே ஒரு சபா!**

தமிழிசை இயக்கம் தொடங்கப் பட்ட காலத்திலேயே 'புண்ணாக்கு தின்ன மாப்பிள்ளை கதை'யைச் சொல்லி, ஆன்மீகப் பாடல்களைத் தமிழில் பாடும் 'இலட்சியத்தைக்' கேலி செய்திருக்கிறார் பெரியார். அது ஒரு கட்டம். பகுத்தறிவு, முற்போக்குப் பாடல்களைப் பாடுவதற்கு எந்த இசைவடிவத்தை தெரிவு செய்வது, தமிழ் மக்களிசையை எந்தத் திசையில் வளர்ப்பது, என்பதே இன்று நம்முன் உள்ள கேள்வி.

பார்ப்பனீயத்தையும் ஆன்மீகத்தையும் தமிழில் பிரச்சாரம் செய்யும் இயக்கமாகத் தமிழிசை இயக்கம் சீரழிவதைக் கண்டு பெரியார் வயிறெரிந்தார். அதை வெளிப்படையாகக் கூறவும் செய்தார். ஆன்மீகமா - உலகாயிதமா, அப்பனைப் பாடுவதா - சுப்பனைப் பாடுவதா, பார்ப்பனியமா - பார்ப்பனிய எதிர்ப்பா — எது தமிழிசையின் உள்ளடக்கமாக இருக்க வேண்டும் என்பதில் தமிழிசை இயக்கம் இரு முகாம்களாகப் பிளவுபட்டது.

தமிழில் பகுத்தறிவுக் கருத்துக்களையும், முற்போக்குக் கருத்துக்களையும் மட்டுமே பாடுவது என்று முடிவு செய்து கொண்டவர்களின் முகாமுக்கு வருவோம். கருநாடக இசை வடிவத்திற்குள் 'பகுத்தறிவை' திணித்தே தீருவது என்று இந்தப் பாசறை தீவிரமாக முயன்று வருகிறது. ஆனால் தண்ணீரில் அமுக்கிய பந்து போல பகுத்தறிவு மூச்சுத்திணறி வெளியே எகிறி விழுகின்றது. இருந்தாலும் இந்த விக்கிரமாதித்தர்கள் மனம் தளர்வதாக இல்லை.

பார்ப்பன 'மனோதர்மத்தில்' ஊறி உப்பிய கருநாடக இசையானாலும் சரி, 'பார்ப்பனக் கலப்பற்ற' தமிழ்ப் பண்களானாலும் சரி, அவற்றை நடப்பு சமூகத் தேவைகளுக்குப் பயன்படுத்துவதென்பது பெரிதும் வரம்புக்குட்பட்ட அளவில் மட்டுமே முடியும். இருட்டடிக்கப்பட்ட தமிழினத்தின் செவ்வியல் இசை மரபை எடுத்துக் காட்டுவது என்பது வேறு; அந்த மரபில் படுத்துத் தூங்குவது என்பது வேறு.

**புதிய விசுவாமித்திரர்கள்!**

இவர்களின் லட்சியமோ விபரீதமாக இருக்கிறது. "பக்க வாத்தியங்களுடன் சம்மணம் போட்டு அமர்ந்து ஆலாபனை, சுரம், நிரவல், தனி ஆவர்த்தனம் ஆகிய அனைத்தும் அடங்கிய முழுக்கச்சேரியை நம் மாட்களாலும் நடத்திக் காட்டமுடியும் என்று நிரூபிக்கப் போகிறோம்" என்று நம்மிடம் பெருமையாகக் கூறுகிறார்கள். யாருக்கு நிரூபிக்கப் போகிறார்கள்? பார்ப்பன வித்துவான்களுக்குத்தான். கடைசியில் வசிட்டன் வாயால் பிரம்மரிஷிப் பட்டம் வாங்குவதற்குத்தான் இத்தனை கவாத்து வேலைகளும்!

பாழுங்கிணற்றில் விழுந்தவன் கரையில் நிற்பவனைப் பார்த்து 'உன்னால் குதிக்க உனக்குத் தைரியம் இருக்கிறதா?' என்று சவால் விட்டானாம். "நீ சும்மா தானே குதித்தாய்; நான் கோவணம் போட்டே குதிப்பேன்" என்று [illegible] தட்டினானாம் கரையில் நின்ற 'வீரன்'. "நின்று கொண்டு பாடுவதால் தமிழ்ப் புற இசைக் கலைஞர்களை யாரும் மதிப்பதில்லை; எனவேதான் நான் உட்கார்ந்து பாடுகிறேன்" என்றொரு அருமையான கண்டுபிடிப்பை வெளியிட்ட 'தொலைக் காட்சி புகழ்' புஷ்பவனம் குப்புசாமி "உட்கார்ந்தது தான் உட்கார்ந்தோம் கர்நாடக சங்கீதமே பாடிவிடுவோமே" என்று இந்த ஆண்டு பெரியார் தமிழிசை விழாவில் முழு நீள கர்நாடக இசைக்கச்சேரி (தமிழில் தான்) நடத்திக் காட்டிவிட்டார். வசிட்டர்கள் மனமிறங்குவார்களா பார்ப்போம்.

உட்கார்ந்து பாடினால் இனிமேல்



படிப்பகம்

www.padippakam.com

உதவாது போலிருக்கிறதே என்று அவாள் புதிய உத்திகளை யோசிக்க எழுந்திருக்கும் நேரத்தில் 'நம்மாள்' உட்காருகிறார்.

தமிழிசையின் மரபில் எதை எடுத்துக் கொள்வது, எதைக் கைவிடுவது, எந்தத் திசையில் வளர்ப்பது என்பதில் இரு வேறு கண்ணோட்டங்கள் இருக்கின்றன.

பார்ப்பன எதிர்ப்புக்குப் பெரியார் பண்டித நடைத் தமிழைப் பயன்படுத்தவில்லை. நாகரிகமான கனவான்கள் துணுக்குற்று ஒதுங்கும்படியான பாமரனின் மொழியில் 'அநாகரிகமாக'ப் பேசினார். அது வெறும் பேச்சு வடிவம் மட்டுமல்ல, உள்ளடக்கத்திற்கு இசைந்த வடிவம்.

பெரியார் பேசிய கருத்துக்களை, **அவர் வெளிப்படுத்திய உணர்ச்சியின் வலிமையுடன்** கர்நாடக இசை வடிவத்தில் கொடுக்க முடியுமா என்று இவர்கள் முயன்று பார்க்கட்டும். அவ்வாறு இசையமைத்து அவர்கள் பாடுகின்ற பாட்டு "அந்த உணர்ச்சியைத்தான் வெளிப் படுத்துகிறது" என்று நான்கு இசையறிஞர்கள் கூடிச் சான்றிதழ் கொடுத்துப் பயனில்லை. மேடையில் அது பாடப்படும் போது கூடியிருக்கின்ற ஆயிரக்கணக்கான மக்கள் அந்த உணர்ச்சிக்கு ஆட்படுகிறார்களா, அல்லது கொட்டாவி விடுகிறார்களா என்றுதான் அதற்கு உரைகல்.

"செவ்வியல் இசையை ரசிக்க ஆயிரக்கணக்கான பேர் கூட மாட்டார்கள். ஐம்பது நூறு பேர்தான் வருவார்கள் அதற்கென்ன செய்ய முடியும்?" என்றும் இவர்கள் நம்மிடம் வாதாடுகிறார்கள்.

பிரச்சினையின் மையத்திற்கு நம்மை இந்தக் கேள்வி இட்டுச் செல்கிறது. தமிழ் இசையை வளர்ப்பதுதான் நம் நோக்கம் எனில் அதைச் சாதிக்கும் வழி என்ன?

ஆகப் பெரும்பான்மையான உழைக்கும் தமிழ் மக்களின் வாழ்வில் எவ்வித முன்னேற்றமில்லாமல், ஏதேனும் ஒரு பல்கலைக்கழக வளாகத்திற்குள் பத்து தமிழறிஞர்கள் கூடி ஆய்வு செய்து தமிழை வளர்ப்பது எப்படி சாத்தியமில்லையோ, அதே போல சில செவ்வியல் இசையறிஞர்களும், ரசிகர்களும் கூடி எந்த அரங்கத்திற்குள்ளும் வைத்து தமிழிசையை வளர்த்து விட முடியாது. ஒரு வேளை அவ்வாறு வளர்க்கப்பட்டாலும் அது பண்டிதத் தமிழைப் போல பண்டித இசையாகத் தனிமைப்பட்டுப் போகும்.

எனவே, தமிழ் மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த முனைபவர்கள் அந்த மக்களின் அவலங்களையும், ஆசைகளையும், போராட்டங்களையும் அவர்களுடைய இசை மொழியில்தான் வெளியிட வேண்டும். அவர்களது இதயத்தின் உணர்வுகளுடன்தான் அது சுருதி சேர வேண்டும். தியாகய்யரின் உணர்வுகளுடனோ, நால்வர் தேவாரத்தின் உணர்வுகளுடனோ அல்ல.

'அரிசனன்னு பேரு வைக்க யாரடா நாயே' என்ற ம.க.இ.க.-வின் பாடல் அடக்குமுறைக்கெதிராகக் குமுறி எழும் தாழ்த்தப்பட்ட மக்களின் **இன்றைய** மன உணர்வுடன் சொல்லில் மட்டுமல்ல இசையிலும் - சுருதி சேர்ந்த காரணத்தினால் தான் அது வெற்றி பெற்றதேயொழிய அதன் தொழில் நுட்பத் தேர்ச்சியினால் அல்ல. வேண்டுமானால் அந்தப் பாடலை ஒரு செவ்வியல் ராகத்தில் மெட்டமைத்துப் பாடிப் பார்க்கட்டும்.

பார்ப்பன எதிர்ப்பு, தமிழின விடுதலை ஆகியவற்றின் அரசியல் அரங்கில் அவர்கள் எவ்வளவு மென்மையாகியிருக்கிறார்களோ அதே அளவுக்கு அவர்களது இசை ரசனையும் மென்மையாகியிருக்கிறது.



**மக்கள் விடுதலையை நோக்கி: ம.க.இ.க. கலைக்குழுவின் நிகழ்ச்சி.**

**தமிழிசையா, தமிழ் மக்களிசையா?**

சமூக மாற்றத்தைச் சாதிக்க புரட்சி செய்வதா, சீர்திருத்தம் கேட்பதா என்ற அரசியல் வினாவுக்கான விடையும் தமிழ் மக்கள் இசையை எத்திசையில் வளர்ப்பது என்ற கேள்விக்கான விடையும் ஒரே கண்ணோட்டத்திலிருந்துதான் வருகின்றன.

"அரசுப் பொறியமைவிலும், பாராளுமன்றத்திலும் நம்மாள்களைப் புகுத்தி, பெரும்பான்மையாக்கி நைசாகக் கோழி அமுக்குவது போல இந்த அரசமைப்பை அமுக்கி நமக்குச் சேவை செய்ய வைத்து விடலாம்" என்று கனவு காட்டுபவர்கள் இசை விசயத்திலும் இதையே செய்கிறார்கள்.

ஆனானப்பட்ட இனமான சிங்கங்கள், சிறுத்தைகளையெல்லாம் பல்லைப் பிடுங்கி கூண்டில் அடைத்து, வேடிக்கையும் காட்டுகின்ற இந்த அரசமைப்பைப் போலவே, 'இரத்தம் தெறிக்கும்' இன உரிமைப் பாடல்களையெல்லாம் சோகையாக்கி படுக்கையில் கிடத்திவிடும் ஆற்றல் கர்நாடக இசைக்கு உண்டு.

இது நேருக்கு நேர் பொருத்திப் பார்க்கத் தக்க எடுத்துக்காட்டு இல்லை எனினும் பிரச்சினையின் சாரம் இதுதான். தமிழனின் இசையைத் தமிழனே பயன்படுத்த முடியாமல் போன இந்தக் 'கொடுமை'யைப் புரிந்து கொள்ள வரலாற்றை நடுநிலையாகப் பார்க்க வேண்டும்.

**மரபின் வரலாறு!**

பவுத்தத்திற்கும் சமணத்திற்கும் எதிரான போராட்டத்தின் முதல் சுற்றில் பெற்ற தோல்வியின் அவலம், அவர்களுக்கெதிரான வன்மம், பார்ப்பன - வேளாள நிலவுடைமைக் கூட்டணியின் அதிகாரத்துக்கான வேட்கை அதில் அவர்கள் பெற்று வந்த வெற்றி ஆகிய சமூகக் காரணிகளினூடே வளர்ந்தன தேவாரப்பண்கள்.

தேக்கமுற்று அழுகும் நிலையிலி



படிப்பகம்

www.padippakam.com

ருந்த சமூகம், அதில் வெள்ளையனிடம் 'படிக்காசு' வாங்கிக் கொண்டு அரசாட்சி நடத்திய சரபோஜி மன்னனின் அவலம், பிரிட்டிஷ் அரசாட்சி மற்றும் அவர்தம் பண்பாட்டு ஆதிக்கத்தின் முன்னே நிற்கவும் முடியாமல், தோல்வியை ஒப்புக் கொள்ளவும் முடியாமல் தடுமாறிய பார்ப்பனிய பண்பாட்டின் குழப்பம் — தோல்வி மற்றும் விரக்தியின் நிலைக்களனாக இருந்த இந்தப் புறநிலையைக் கண் திறந்து காண்பதற்கு அச்சமுற்ற ஆளும் வர்க்கத்தின், சாதியினரின் 'ஆன்மா' தன் மனதிற்குள் வரைந்து கொண்ட பொய் உணர்ச்சிகளின் ஓவியம்தான் தியாகய்யரின் இசை மற்றும் பாடல்கள்.

நால்வர் காலத்து மன்னர்கள் சரபோஜியைப் போல 'பென்சன் மன்னர்கள்' அல்ல என்பதுடன் தியாகய்யரிடம் நிலவிய விரக்தியும் தோல்வி மனப்பான்மையும் நால்வரிடம் இல்லை. அதனால் தானோ என்னவோ தேவாரப் பாடல்களின் இலக்கியத் தரத்தின் முன்நிற்கும் தகுதிகூட தியாகய்யர் பாடல்களுக்கு இல்லை. எனவேதான் ஒப்பீட்டளவில் துல்லியமான கலைவடிவமான கவிதையிலிருந்து பின்வாங்கி, (அல்லது தோற்று) நுட்பமான கலை வடிவமான இசைக்குள் மென்மேலும் சரணடைந்திருக்கின்றன தியாகய்யரின் கீர்த்தனங்கள்.

''நாமார்க்கும் குடியல்லோம்'' என்றோ 'ஆணை நமதே' என்றோ கூறுகின்ற தன்னம்பிக்கையுணர்ச்சி தியாகய்யரிடம் கிடையாது. 'நிதிசால சுகமா' என்று இறைஞ்ச மட்டுமே அவரால் முடிந்தது.

இசை இலக்கணங்கள் அடிப்படையில் ஒன்றாக இருந்தபோதும் அவற்றின் அடிப்படையில் சிலப்பதிகாரமும், தேவாரமும், தியாகய்யரும் வெளியிட்ட மன உணர்வுகள் ஒன்றேயல்ல; ஒரு தனிப்பட்ட ராகத்தை எடுத்துக் கொண்டாலும் அதன் இலக்கண வரம்புகளுக் குட்பட்டே இளங்கோவடிகளும், நால்வரும், தியாகய்யரும் இன்று இளையராஜாவும் அவற்றை விரித்துச் செல்கின்ற முறை வேறு. அவை நோக்கத்துக்கும் சமூக நிலைமைகளுக்கும் ஏற்ப வேறுபடுகின்றன.

இன்றைய கட்டத்தில் சமூக மாற்றத்துக்காகப் போராடுபவர்கள் இந்த இரண்டு இசை மரபுகளையும் பயன்படுத்த எண்ணும்போது அவற்றின் தோற்றம், அவை வளர்க்கப்பட்ட விதம், இன்றைய சமூகத்தில் அவற்றின் பயன்பாடு ஆகிய அனைத்தையும் பரிசீலிக்க வேண்டும். அவ்வாறு பரிசீலித்தால் இவ்விரு மரபுகளையும் பெரிதும் வரம்புக்குட்பட்ட அளவில்தான் பயன்படுத்த முடியும் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

**ஐரோப்பிய அனுபவம்:**

ஐரோப்பாவிலும் மரபு வழிப்பட்ட இசை மூன்று பிரிவுகளாகத்தான் இருந்தது 1. ஆலய இறை வழிபாட்டிசை 2. நிலப்பிரபுக்கள், மன்னர்களின் பொழுது போக்கிற்காக அவர்களது அரங்கங்களில் பாடிய இசை 3. விவசாயிகள் மத்தியிலான நாட்டுப்புற இசை. புரட்சிகர இயக்கத்தின் வலிமை பெருகப் பெருக இசையும் சமயச் சார்பற்ற தன்மை கொண்டதாகவும், சமய எதிர்ப்புத் தன்மை கொண்டதாகவும் மாறியது. மரபுத் தளையிலிருந்து விடுபட்டது. புதிய இசை வடிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

''சிம்பனி என்ற புதிய இசை வடிவத்தை அறிமுகப்படுத்திய மோசார்ட், ஹேடன், பீத்தோவன் போன்ற இசை மேதைகள் தேவாலய இசையில் தங்கள் இசைமரபைத் தேடவில்லை. பொருள் முதல்வாத கிரேக்கத் தத்துவ ஞானத்திலும், பித்த கோரஸின் 'எதிர்மறைகளின் ஒன்றுகலத்தல்' என்ற கோட்பாட்டிலும் தங்கள் மரபைத் தேடினார்கள். தனது இசைக்குரிய ஆற்றலையும் வேகத்தையும் பிரெஞ்சுப் புரட்சியிலிருந்து பெற்றார் பீத்தோவன்.'' — என்கிறார் ஜார்ஜ் தாம்சன் (மனித சமூக சாரம்)

**சொந்த புத்தி வேண்டுமா**
**தந்த புத்தி போதுமா?**

நமது நோக்கம் மனித குல விடுதலையாக இருக்கும் பட்சத்தில், தமிழ்ப் பண்பாட்டிலும் பிற இன மக்களின் பண்பாடுகளிலும் உள்ள இத்தகைய மரபைத் தான் நாம் தேட வேண்டும். தமிழ்ப் பண்களையோ கர்நாடக இசையையோ கற்க வேண்டாம் என்பதல்ல இதன் பொருள். கற்க வேண்டும். ஆனால் எதிலே காலூன்றி நிற்கப் போகிறோம் என்பதே கேள்வி. உயிர்த்துடிப்புள்ள உழைக்கும் மக்களின் இசை/சூலை மரபிலா? உயிர்த் துடிப்பை சமனம் செய்வதற்காகவே உருவாக்கப்பட்ட இசை மரபிலா? புதிய தமிழ் மக்கள் இசையைப் படைப்பதற்கான ஆற்றலையும் அங்கீகாரத்தையும் யாரிடம் தேடப் போகிறோம் போராடும் உழைக்கும் மக்களிடமிருந்தா? அல்லது வசிட்டர்களிடமிருந்தா?

சாந்தப்படுத்துவதே நமது இசையின் பாரம்பரியம் என்று கூறும் சங்கராச்சாரி, அதற்கு எடுத்துக்காட்டாகத் தியாகய்யரை மட்டும் கூறவில்லை; தேவாரத்தையும் சேர்த்துத்தான் கூறுகிறார்.

சைவ சமயக் குரவர்களின் 'ஆன்மீக' நோக்கத்திலும் வழிமுறையிலும் நாம் வேறுபட்டாலும், தமது இலட்சியத்தை நிறைவேற்றிக் கொள்ள அவர்கள் தமது சொந்தப் புத்தியைப் பயன்படுத்தி இசையமைத்தார்கள் என்பதை நாம் மறுக்கவியலாது. பகுத்தறிவை வளர்ப்பதற்கும் சொந்தப்புத்தி தேவையில்லை, 'ஆன்மீகம்' தந்த புத்தியே போதும் என்பவர்களை யாரும் கைதூக்கி விடமுடியாது.

இசை என்னும் நுட்பமான கலை வடிவம் விளக்கிச் சொல்லக் கடினமானதுதான். ஆனால் தீவிர பார்ப்பனிய எதிர்ப்பாளர்களும், சங்கராச்சாரியும் இசைமரபைத் தெரிவுசெய்யும் விசயத்தில் மட்டும் இசைந்து போகிறார்களே, அதன் நுட்பத்தைப் புரிந்து கொள்வ தொன்றும் அத்தனை கடினமல்ல.

உண்மையான பகுத்தறிவாளர்கள் சிந்திக்க வேண்டும்.

— சூரியன்

''புதிய கலாச்சாரம்''
பற்றிய அறிக்கை
4-வது பாரம் (8-ம் பிரிவுப்படி)

| | | |
|---|---|---|
| 1. | வெளியிடும் இடம் | - சென்னை |
| 2. | வெளியிடும் காலம் | - மாதம் ஒரு முறை |
| 3. | அச்சிடுபவர் | - எம்.கே.சாமி |
| | தேசிய இனம் | - தமிழர் |
| | முகவரி | - பிரேம் பிரஸ், 107 ஏ, பெரியார் பாதை, (மேற்கு) சென்னை - 600 094. |
| 4. | வெளியிடுபவர் | - வி. வல்லபேசன் |
| | தேசிய இனம் | - தமிழர் |
| | முகவரி | - 22, சாமியார் தோட்டம், ஆலந்தூர் சாலை, சைதாப்பேட்டை, சென்னை-15 |
| 5. | ஆசிரியர் | - வி. வல்லபேசன் |
| | தேசிய இனம் | - தமிழர் |
| | முகவரி | - 22, சாமியார் தோட்டம், ஆலந்தூர் சாலை, சைதாப்பேட்டை, சென்னை-15 |
| 6. | உரிமையாளர் | - வி. வல்லபேசன் |
| | தேசிய இனம் | - தமிழர் |
| | முகவரி | - 22, சாமியார் தோட்டம், ஆலந்தூர் சாலை, சைதாப்பேட்டை, சென்னை-15. |

வி. வல்லபேசனாகிய நான் மேற்கூறிய தகவல்கள் அனைத்தும் உண்மையே என இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

1.3.95 (ஒப்பம்) வி. வல்லபேசன், வெளியிடுபவர்.

படிக்க வேண்டிய
பயனுள்ள நூல்களை
கிடைக்கச் செய்யும்
கீழைக்காற்றில்.....

- திராவிட இயக்கத்தில் பிளவுகள் — கோ. கேசவன் ரூ. 20.00
- பகத்சிங்கும் இந்திய அரசியலும் — சுப. வீரபாண்டியன் ரூ. 20.00
- பெண்ணெனும் படைப்பு — டாக்டர் க. பஞ்சாங்கம் ரூ. 25.00
- சடங்கு (புதினம்) — செ. கணேசலிங்கன் ரூ. 36.00

எமது இரண்டாவது வெளியீடு

- மார்க்சிய மூல நூல்களுக்கு வாசகர் வழிகாட்டி — மாரிஸ் கார்ன் போர்த் ரூ. 35.00

மற்றும்
முற்போக்குப் பத்திரிகைகள் - ஒலிநாடாக்கள்

கீழைக்காற்று வெளியீட்டகம்
10, ஔலியா சாகிபு தெரு
எல்லீசு சாலை, சென்னை - 600 002.



படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் மக்கள் இசைவிழா இரண்டாமாண்டு

தமிழினப் பகைவர்கள், பிழைப்புவாதிகள், காசுக்குக் கவி பாடும் வார்த்தை வியாபாரிகள் மற்றும் தமிழகத்தின் 'பிரம்மாண்டமான' அவமானத்தைச் சுமந்து நின்ற சுவரொட்டிகள் ஆகியவற்றால் சனவரி 1 முதல் 5 வரை கறை படுத்தப்பட்ட தஞ்சை நகரம் சனவரி கடைசி வாரத்தில் கழுவிச் சுத்தம் செய்யப்பட்டது.

கிரகணத்திலிருந்து விடுபட்ட முழுமதி போல தஞ்சை புதிய பொலிவுடன் விழித்தது சனவரி 29-ஆம் நாள். தமிழ் மக்கள் இசை விழாவை அறிவிக்கும் தட்டிகள், சுவரொட்டிகள், சுவர் விளம்பரங்கள்... தஞ்சையிலும் திருவையாற்றிலும் காண்போர் கையிலெல்லாம் தென்பட்ட தமிழ் மக்கள் இசைவிழாவின் துண்டுப் பிரசுரங்கள்.

பறை முழக்கும் தமிழ் மகனின் ஓவியத்தைக் கண்ட மாத்திரத்தில் ''தமிழ் மக்கள் இசைவிழாவா?'' என்று மகிழ்ச்சியுடன் வரவேற்ற தஞ்சை மக்களின் ஆர்வம் - இவற்றினூடே சனவரி 29 காலை துவங்கியது விழா.

காலை நிகழ்ச்சியான கருத்தரங்கைத் தஞ்சையிலும் மாலை இசை நிகழ்ச்சியைத் திருவையாற்றிலும் நடத்த காவல் துறை இறுதி நாட்கள் வரை அனுமதிக்கவில்லை. உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட்மனுவின் விசாரணையும் மீண்டும் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது, எனவே, தஞ்சையிலேயே நிகழ்ச்சியை நடத்துவதென நாம் முடிவு செய்தோம். அதன்பின் 'திருவையாற்றில் அனுமதிதர காவல்துறை பரிசீலிக்கலாம்'' என்று மதில் மேல் பூனையாக ஒரு தீர்ப்பை வழங்கியது உயர் நீதி மன்றம்.

இவ்வாறு அரசும் நீதிமன்றமும் அமைத்துக்கொண்ட 'அதிகார பூர்வமற்ற' கூட்டணியை எதிர்த்து, கருத்தரங்கப் பந்தல் முழுதும் நிரம்பி வழிந்தது தமிழ் மக்கள் கூட்டம்.

கொம்பு ஊதப், பறைகள் முழங்கத் துவங்கியது கருத்தரங்கு. தஞ்சைச் செயலர் தோழர் காளியப்பன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

''இது வெறும் விழாவல்ல, தமிழ் மக்கள் உரிமையை நிலைநாட்டுவதற்குத் துவங்கியிருக்கும் போராட்டம்'' என்று கூறித் தன் தலைமையுரையைத் துவக்கினார் தோழர் மருதையன்.

''நெருக்கடியில் சிக்கியிருக்கும் கர்நாடக இசையை முட்டுக் கொடுத்து நிறுத்த பல முயற்சிகள் செய்யப்படுகின்றன. ஆனால் அதன் அழிவு தடுக்கவியலாதது. கர்நாடக இசை காசுக்கு விற்கும் கடைச்சரக்கான பிறகு 'ஆன்மீகப் பெருமிதம்' பேசுவதற்கு 'அவாளுக்கு' எந்த அருகதையும் கிடையாது. அவ்வாறு பேசும் போது அவர்களது இரட்டை வேடம்தான் அம்பலமாகிறது'' என்று குறிப்பிட்ட அவர் இன்று மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ள திரையிசையின் தன்மை குறித்தும் அதன் அபாயம் குறித்தும் நாம் கவனம் செலுத்த வேண்டுமெனக் கூறினார்.

''தமிழ் இனப் பண்பாட்டு அடையாளத்தை அழிக்கப் பார்ப்பன தேசியம் முயல்வதைப் போலவே இன்றைய சர்வ தேசிய மயமாதலும் மறுகாலனியாதலும் நம் பண்பாட்டு உரிமைகளை நசுக்குகின்றன. இசைத்துறையில் மக்களை அறிவற்றவர்களாக வைத்திருக்க நாட்டுப்புற இசையின் தாளங்களின் மீது சீரழிந்த உள்ளடக்கம் கொண்ட இசை ஏற்றித் தரப்படுகிறது. உணர்ச்சிகளைக் குழப்புவதன் மூலம் மதிப்பீடுகளைக் குழப்பும் திட்டமிட்ட சதிதான் இது.''

''சீரழிவு இசையை நாங்களும்தான் எதிர்க்கிறோம்' என்று கூறுகின்ற பார்ப்பனீய கர்நாடக இசைக் கும்பலுடன் நாம் கூட்டு சேர முடியாது. ஒருவேளை தனியர்களாக இருந்தாலும் நாம்தான் இப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்'' என்று கூறித் தன் தலைமை உரையை முடித்தார்.

தமிழிசையில் சுருதிகள் என்ற தலைப்பில் பேசிய பேரா. வீரபாண்டியன்,

''தமிழிசைக்காகத் துவங்கப்பட்ட கிளர்ச்சி பார்ப்பனீயத்தால் செரிக்கப்பட்டபின், அந்தப் போராட்டத்தின் அடுத்த கட்டமாகத் துவங்கியிருக்கும் தமிழ் மக்கள் இசைவிழா வரலாற்று முக்கியத்துவமுடையது.

சங்ககாலத்திற்குப் பின் படிப்படியாக நாம் நமது நுண்கலைகளை இழந்துவிட்டோம். தப்பி நின்ற நாட்டுப் புறக்கலைக்கும் இப்போது ஆபத்து வந்திருக்கிறது'' என்று துவங்கி சுருதிகள் பற்றிப் பேசத் தொடங்கினார்.



தோழர் காளியப்பனின் வரவேற்புரை. மேடையில் இடமிருந்து வலமாக: மருதையன், வீரபாண்டியன், குணசேகரன்.

ஒரு விநாடிக்கு 240 அலைவுகள் கொண்டது! 'ச'. அதன் பின் ஏறு வரிசையில் அலைவுகள் அதிகரிக்க ரி,க,ம,ப,த,நி, ஆகிய சுரங்களாகின்றன. சுரம் சுரநிலை, சுருதி மற்றும் இயக்கு என்கிற ஸ்தாயி ஆகியவை குறித்த கணித அளவீடுகளைப் பண்டைத் தமிழர்கள் அறிந்திருந்தனர் என்பதை சிலப்பதிகாரத்திலிருந்து நாம் அறிகிறோம். இதைத்தான் தமது ஆய்வின் மூலம் நிலைநாட்டினார் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர்.

இதே போல நாட்டுப்புற இசையில் சுருதிகள் வகிக்கும் பங்கை நாம் ஆய்வு செய்து கொண்டுவர வேண்



படிப்பகம்

www.padippakam.com

டும். உணர்வு நுட்பமாக ஆக, ஆக சுருதிகள் பற்றிய அறிவு நமக்குத் தேவைப்படுகிறது. இசை, நடனம் ஆகிய நமது மரபுகளிலிருந்து நாம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளோம். இந்நிலையை மாற்ற வேண்டும்'' என்று முடித்தார் பேராசிரியர் வீரபாண்டியன்.

அடுத்து துவங்கியது பேரா.மா. வைத்திலிங்கன், திரு.மா.கோடிலிங்கம் குழுவினரின் சிலப்பதிகார இசைய ரங்கம்.

இளங்கோவடிகள் கடவுள் வாழ்த்துக்குப் பதிலாக 'திங்களைப் போற்றுதும்' என்று அரச வாழ்த்துத்தான் பாடியுள்ளார் எனக் கூறி அப்பாடலை இசைத்து, நிகழ்ச்சியைத் துவங்கினார்.

கோவலன் - கண்ணகி திருமணக் காட்சி, மணவிழாவில் ஊதப்படும் சங்கின் ஒலிக்கு ஏற்பவே அமைத்திருக்கும் 'முரசதிர்ந்தன' என்ற பாடலை இசைத்து சிலம்பு ஒரு இசைக்காப்பியம் என்பதை விளக்கினார் பேரா. வைத்திலிங்கன்.

சாதாளிப் பண்ணில் அமைந்த 'சித்திரப் படத்துட்புக்கு' எனத் துவங்கும் பாடல் வாயிலாக யாழின் அமைப்பை விளக்கி, அந்தச் சாதாளிப் பண் இன்று சுத்தசாவேரி என்று கூறப்படுவதையும் குறிப்பிட்டார்.

இசை இலக்கணத்தின் அடிப்படையே அளபடைதான் என்பதையும், நீட்டு வழி நீட்டி குறுக்கும் வழி குறுக்குவதுதான் பண் என்பதையும், தமிழன் கண்டவைதான் ஏழு சுரங்கள் என்பதையும் விளக்கிப் பேசினார்.

புகழ் பெற்ற 'திங்கள் மாலை வெண்குடையான்'' எனும் கானல் வரியையும், அதன்பின் வேட்டுவ வரியையும் பாடி, வேட்டுவவரி பறையொலிக்கேற்ப அமைக்கப்பட்டிருப்பதையும், கானல்வரியின் உள்ளடக்கம் நாட்டுப் புறவியல் முறையிலும், இசை செவ்வியல் முறையிலும் அமைந்திருப்பதையும் சுட்டிக் காட்டினார்.

'ஆய்ச்சியர் குரவை'யைப் பாடி, அதே ராகத்தில் அமைந்த 'வடவரையை மத்தாக்கி' எனும் பாடலை செவ்வியல் முறையில் மாற்றிச் சிலர் பாடுவதையும் தவறெனச் சுட்டிக் காட்டினார்.

இரண்டே மணி நேரத்தில் சிலப்பதிகாரத்தின் இசைச்சிறப்பை விளக்கி, பாடியும் காட்டுவது பெரிதும் கடினம் எனினும் அதைச் சிறப்புறச் செய்து முடித்தனர்.

உணவு இடைவேளைக்குப்பின் திரு. அருளியின் உரையுடன் துவங்கியது பிற்பகல் நிகழ்ச்சி. தமிழிசையின் தொன்மைக்கான சொல்லியல் ஆதாரங்கள் என்ற தலைப்பில் 'கர்நாடக' என்ற சொல்லின் தோற்றத்தை விளக்கினார் திரு. அருளி.

''மலையைக் கல் என்று குறிப்பிடுவது பழந்தமிழிலக்கியங்களில் உண்டு. கல் + நாடு + அகம் = கல்நாடகம் என்றாகி பின் கர்நாடகம் எனத் திரிந்தது. 12-ஆம் நூற்றாண்டின் மகாராட்டிரத்தின் ஒரு பகுதியை ஆண்ட சோமேசுரப் புல்லோக மான் எனும் மன்னன் தனது நாட்டுக்குத் தெற்கே வழங்கி வந்த தென்னாட்டு இசையை இவ்வாறு குறிப்பிட, அதன்பிறகுதான் இந்தப் பெயரே வழக்குக்கு வந்தது.

ஆனால் யாழ் இலக்கணத்திற்கெனத் தனி நூல் இருந்ததென தொல்காப்பியமே குறிப்பிடுமளவுக்குத் தமிழிசை தொன்மையானது.

## வானொலியின் தமிழ் விரோதம்

தமிழரின் புதிய சமுதாயச் சிந்தனைப் பாடல்களைத் தடுப்பதற்கென்றே ஒரு புதிய சதித்திட்டம் தீட்டியிருக்கிறார்கள் சென்னை வானொலி நிலையப் பார்ப்பன அதிகாரிகள். தமிழ்க் கீர்த்தனங்களை இயற்றுபவர்களே அவற்றைப் பாடக்கூடிய இசைவாணர்களாகவும் இருக்க வேண்டுமாம். திரு.தண்டபாணி அவர்கள் தான் எழுதிய கீர்த்தனங்களை, முதுபெரும் இசைவாணர் திரு. வச்சிரவேலனாரைக் கொண்டு பாடச் செய்ய அனுமதி கேட்டபோது மேற் கூறிய விதியைக் (சதியை) காட்டி நிராகரித்திருக்கிறார் நிலைய இயக்குனர்.

தெலுங்கு, வடமொழி கீர்த்தனங்களாக இருந்தால் பாலமுரளி கிருஷ்ணா எழுதியதை லால்குடியும், லால்குடி எழுதியதை குன்னக்குடியும் வாசிக்கலாம், பாடலாம். தமிழுக்கு மட்டும் தடை.

அதே போல எவ்வளவு சிறந்த பாடகராக இருந்தாலும் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு 'ஏ' கிரேடு கிடையாது. அது கர்நாடக இசை வித்துவான்களுக்கு மட்டும்தானாம்.

*சொல்லீர் திருந்துமா சாதிக்கீர்.?*

அமயம் என்ற சொல் சமயம் என்றும், அந்தி என்ற சொல் சந்தி என்றும் திரிந்ததைப் போலவே அரணம் என்ற தமிழ்ச் சொல் சரணம் என்று திரிந்தது. அதேபோல அராகம் என்ற சொல் ராகம் எனத் திருத்தப்பட்டது.

சீர்த்தி என்ற தமிழ்ச் சொல்லுக்கு புகழ்தல் எனப் பொருள். சீர்த்தி கீர்த்தியாகி கீர்த்தனம் எனத் திரிந்தது. பலவு என்ற சொல்லுக்குத் திரும்பத் திரும்பக் கூறுதல் என்று பொருள். பலவு → பல்லவு → பல்லவி → அனுபல்லவி எனத் திரிக்கப்பட்டது.

பாட்டுப் பாடுவதே கூடாது என்று அவர்களது சாத்திரங்கள் பார்ப்பனர்களுக்குத் தடைவிதித்திருக்கும் போது அவர்களுக்கும் இசைக்கும் என்ன தொடர்பு இருக்க முடியும். தடையை மீறிப் பாடிய பார்ப்பனர்கள் தனிச் சேரிக்கு ஒதுக்கப்பட்டதை சிலப்பதிகாரம் கூறுகிறது. 'சாமகானம்' நரிகள் ஊளையிடுவதுபோல் இருப்பதாக ரிக் வேதமே குறிப்பிடுகின்றது.

தாய்மொழி தெலுங்காக இருந்தாலும் தன் வாழ்நாளின் கடைசிக் காலத்தில் ஒரேயொரு முறைதான் தியாகய்யர் திருப்பதிக்குச் சென்றதாகக் கூறுகின்றனர். திருவையாற்றில் இருந்து, காவிரித் தண்ணீர் குடித்து, தன் வாழ்நாள் முழுதும் தமிழிசையைக் கேட்டுக் கேட்டு எழுதியவை தியாகய்யரின் கீர்த்தனங்கள். இதுவன்றி கூறப்படுபவை எல்லாம் வெறும் பார்ப்பனப் புரட்டு'' என்று முடித்தார்.

அடுத்து 'திராவிடர் இசை' நூலாசிரியர் திரு. தண்டபாணி அவர்கள் எழுதியனுப்பியிருந்த கட்டுரை வாசிக்கப்பட்டது.

''இசைத் தமிழ் தோன்றிய காலத்திலிருந்து சுமார் 100 இசை வடிவங்கள் தமிழிசையில் இருந்திருக்கின்றன என உ.வே.சா கூறுகிறார். அவற்றிலொன்றுதான் கீர்த்தன வடிவமாகும். சீர்த்தியே கீர்த்தி எனத் திரிந்தது. பழைய தமிழ் இசை வடிவமான 'உரு'தான் இன்றைய கீர்த்தனம் என ஒப்புதல் வாக்குமூலம் தருகிறார் உ.வே.சா. இன்று வழங்கும் கீர்த்தனை வடிவத்தை முதன்முதலில் உருவாக்கியவர் முத்துத் தாண்டவர் தான். இதையே பின்னர் தியாகய்யரும் பிறரும் பின்பற்றினர்.

சங்கீத பிதாமகர் என்று அவர்கள் கூறும் புரந்தரதாசரும், ஆந்திராவின் அன்னமாச்சாரியாரும் நாம சங்கீர்த்தனம், நாம பஜனை போன்ற வடிவங்களில்தான் எழுதினர். கீர்த்தன வடிவம் அவர்களுக்குத் தெரியாது.

பண்டை இசைத் தமிழில் பக்தி மார்க்கம் ஏதும் கிடையாது. 7-ஆம் நூற்றாண்டு தேவார இசைப்பாடலுக்குக்குப் பின்னர்தான் இசை பக்தி மார்க்கத்துக்குத் திரும்பியது. உலக அளவிலேயே இராக, தாளக் கட்டுக்கோப்புடன் பாடப்படும் மிகப்பழமையான இசை இன்றளவில் தேவார இசை மட்டும்தான். இதை ஓதுவார்கள்தான் காப்பாற்றி வந்துள்ளனர்.

''தலையே நீ வணங்காய்'' என்ற திருநாவுக்கரசர் தேவாரத்தில் இந்த முதலடி திரும்பத் திரும்பப் பாடப்படும் முறை அமைந்துள்ளது. இதிலிருந்துதான் பல்லவி, அனுபல்லவி முறை வகுத்து கீர்த்தன வடிவத்தை உருவாக்கியிருக்கிறார் முத்துத் தாண்டவர்.

இன்று கர்நாடக இசையில் கூறப்படும் சங்கதி, கமகம் இவையெல்லாம் 'மாதர்பிறை' எனும் வாரப் பாடலைப் பாடும் முறையில் உள்ளன. கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட



படிப்பகம்

www.padippakam.com

முதல் வடமொழி இசை இலக்கண நூலான சங்கீத இரத்தினாகரத்தை எழுதிய சாரங்கதேவர் தமிழகம் வந்து இசை பயின்றுதான் எழுதினார். அந்நூலில் தேவார வர்த்தினி என்னும் பண்ணையும் தமிழிலேயே குறிப்பிட்டுள்ளார்.''

களவாடிய இசையே கருநாடக இசை என்பதை இவ்வாறு நிறுவிய திரு தண்டபாணி அவர்கள், கடும் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டு வெளியில் பயணம் செய்ய இயலாத நிலையில் இருந்தபோதும் மிகுந்த சிரமத்திற்கிடையிலும் இக்கட்டுரையை எழுதி அனுப்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து, **உழைக்கும் மக்கள் இசை வகைகள்** என்ற தலைப்பில் பேசத் தொடங்கினார் முனைவர் **கே.ஏ. குணசேகரன்.**

சில ஆண்டுகளுக்கு முன், தான் பங்கேற்ற கருத்தரங்கொன்றிற்குத் தலைமை வகித்த க.நா. சுப்பிரமணியம், ''நாட்டுப்புற இசையில் ஏது வகைகள் எல்லாம் ஒரே மாதிரி தன்னானாவாத்தான் இருக்கு'' என்று திமிராகப் பேசியதை நினைவு கூர்ந்து தன் உரையைத் துவக்கினார்.

''தொழில்வகை பலவாக இருக்கும் போது இசைவகையும் பலவாகவே இருக்கும் என்று கூறி இறவைப் பாட்டிலேயே எத்து இறவைக்கும் கமலை இறவைக்கும் உள்ள வேறுபாட்டைப் பாடிக்காட்டினார். அதேபோல தெம்மாங்கில் ஒத்தடி, நாலடி, இழுவைத் தெம்மாங்கு, தெக்கத்தித் தெம்மாங்கு என்று பலவகை இருப்பதையும் அவை வட்டாரத்துக்கு வட்டாரம் வேறுபடுவதற்கான காரணங்களையும் விளக்கினார்.

தமிழகத்தில் மட்டுமல்ல உலகம் முழுவதுமே உழைப்பிலிருந்துதான் கலையும் இசையும் பிறந்தன. உழைக்கும் மக்கள் உருவாக்கிய இசையைக் களவாடித்தான் செவ்வியல் இசை உருவாக்கப்பட்டது. கர்நாடக இசை தேவாரத்திலிருந்து களவாடப்பட்டது என்றால் தேவார இசைக்கும் மூத்தது நாட்டுப்புற இசை என்பதையும் நாம் கவனிக்க வேண்டும் என்றார்.

தமிழகத்தின் சிறப்பான இசை வடிவமான நையாண்டியில் பல வகைகள் இருப்பதை நாயனம், தவிலுடன் பாடிக் காட்டி, அது ஒடுக்கப்பட்ட மக்களின் எதிர்ப்புணர்வைக் காட்டும் இசையாக இருந்ததையும் சுட்டிக்காட்டினார்.

சிந்து வகைப்பாடல்களில் காவடிச் சிந்து உருவான விதத்தையும், கதை சொல்லும் வடிவமாக கொலைச்சிந்து பயன்பட்டு வருவதையும் கூறி, இவ்வளவு இசை வகைகள் இருப்பினும் நாட்டுப்புற இசை நீண்டகாலமாகவே தீண்டத்தகாததாக வைக்கப்பட்டிருந்ததைக் குறிப்பிட்டார்.

தாலாட்டுப் பாடலொன்றையும், ஒப்பாரிப் பாடலொன்றையும் பாடிக் காட்டி, ''உழைக்கும் பெண்கள் தங்கள் சோகத்தை வெளியிடும் வடிவமாக வுள்ள இந்த ஒப்பாரியை மக்கள் கண்ணீர் மல்கக் கேட்கின்றனர். ஆனால் வானொலி மட்டும் இதை ஒலிபரப்புவதில்லை. பெண் விடுதலைக்கான ஆயுதமாக நாம் இதைப் பயன்படுத்த வேண்டும்'' என்று கூறினார்.

''இன்னும் ஏராளமான தொழிற்பாடல்கள் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக போருக்கு புறப்படுமுன் வெள்ளையம் மாளிடம் விடைபெறும் பாடலில் கொஞ்சுதல், வீரம், பிரிவு, நாட்டுப்பற்று ஆகிய வேறுபட்ட உணர்வுகளை உள்ளடக்கிய இசையை அமைக்கும் ஆற்றலை நம் உழைக்கும் மக்கள் வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

நாட்டுப்புற இசையை சரிகமபதநி எனும் இலக்கணத்துக்குள் அடைத்தால் அது சிதைந்துவிடும். ஆனால் நமக்கென இசைக்குறிப்பையும் இலக்கணத்தையும் நாம் உருவாக்க வேண்டும். நாட்டுப்புற இசையில் நிரம்பியிருக்கும் ன,த,ல,ர போன்ற எழுத்துக்களைப் பயன்படுத்தியும் தேவையானால் புதிதாகச் சிலவற்றைச் சேர்த்தும் இதை நாம் செய்ய வேண்டும்.

நான் ஒருவன் தேடியதில் கிடைத்த இசை வகைகள் இவ்வளவு. நாம் எல்லோரும் முயன்றால் இன்னும் ஏராளமாகச் சேகரிக்க முடியும். இதை நாம் சாதித்தோமானால் இவ்விழாவின் நோக்கம் நிறைவேறியதாகும்'' எனக் கூறி முடித்தார்.

மாலை சுமார் 7 மணிக்கு இசை, கலை நிகழ்ச்சிகள் தொடங்கின. தோழர் குணசேகரன் ஒவ்வொரு குழுவையும் அறிமுகப்படுத்தி இணைப்புரை வழங்கினார்.

கொம்புகள் முழங்கியவுடனே வரிசையாக வந்த திருவண்ணாமலை பெரிய மேளம், கோவை ஜிக்காட்டம், ரெட்டிப்பாளையம் தப்பாட்டம் ஆகியவை நிகழ்ச்சியைப் போர்க் குணத்துடன் துவக்கி வைத்தன.

தன்னானே குழுவின் சின்னப் பொண்ணு, குணசேகரன் ஆகியோரின் பாடல்களும் பரவை முனியம்மா குழுவினரின் நாட்டுப்புறப் பாடல்களும் தொடர்ந்தன.

திரு. குமரேசன் குழுவினர் பாரதிதாசன் பாடல்களைச் செவ்வியல் இசை முறையில் பாடினர்.

கரகம், காவடி, குறவன் குறத்தி ஆட்டம், கோமாளி ஆட்டம், பொய்க்கால் குதிரை ஆகிய கலை நிகழ்ச்சிகள் அடுத்தடுத்து நிகழ்த்தப்பட்டன.

அடுத்து மதுரை நாட்டுப்புற மேடை நாடகக் கலைஞர்கள் நந்தன் கதை, நாடகப் பாடல்கள் பாடினர்.

கர்நாடக இசைக்களவையும் தமிழ் மக்கள் இசைவிழாவின் நோக்கத்தையும் விளக்கி ம.க.இ.க கலைக்குழு இசை நிகழ்ச்சி நடத்தியது.

இறுதியாக 'மனுசங்கடா' பாடலை கே.ஏ. குணசேகரன் பாட, அதன்பின் சர்வதேசிய கீதத்துடன் விழா நிறைவடைந்தது.

ஆனால் போராட்டம் தொடரும்.

## ஒலிப்பேழைகள் விற்பனைக்கு
### தமிழ் மக்கள் இசைவிழா கருத்தரங்க உரைகள்

சனவரி-29 1995 அன்று தஞ்சையில் நடைபெற்ற தமிழ் மக்கள் இசைவிழா (இரண்டாம் ஆண்டு) கருத்தரங்க உரைகளின் பதிவு செய்யப்பட்ட ஒலிப்பேழைகள் விற்பனைக்கு உள்ளன. விவரம் கீழ்வருமாறு:

| | | |
|---|---|---|
| ● தலைமை உரை<br>மருதையன், பொதுச்செயலர்<br>ம.க.இ.க. தமிழ்நாடு | 60 நி | ரூ. 25 |
| ● 'தமிழிசையில் சுருதிகள்'<br>பேரா. எஸ்.ஏ. வீரபாண்டியன் | " | ரூ. 25 |
| ● 'தமிழிசையின் தொன்மைக்கு சொல்லியல் ஆதாரங்கள்'<br>திரு. அருளி | " | ரூ. 25 |
| ● சிலப்பதிகார இசையரங்கம்<br>பேரா. மா. வைத்தியலிங்கன்<br>திரு. மா. கோடிலிங்கம் | 120 நி<br>இரு பேழைகள் | ரூ. 50 |
| ● 'களவாடிய இசையே கர்நாடக இசை'<br>கீர்த்தனை வடிவங்கள் பற்றி<br>திரு. தண்டபாணி<br>(வாசிக்கப்பட்ட கட்டுரை) | 60 நி | ரூ. 25 |
| ● உழைக்கும் மக்கள் இசை வகைகள்<br>முனை. கே.ஏ. குணசேகரன் | 90 | ரூ. 40 |

ஒலிப்பேழைகள் தேவைப்படுவோர் நேரிலோ அஞ்சல் மூலமோ அணுக வேண்டிய முகவரி:

தமிழ்மணி, உதயசூரியன் தேநீர் விடுதி, காந்திபுரம், தில்லைநகர் 5-வது குறுக்குத் தெரு, திருச்சி-18

கீழைக்காற்று நூல் வெளியீட்டகம், 10, ஔலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை-2.

அஞ்சலில் பெற விரும்புவோர் ஒரு ஒலிப்பேழைக்கு ரூ. 12 கூடுதலாக அனுப்பவும். ஒலிப்பேழைகளின் எண்ணிக்கையைப் பொறுத்து அஞ்சல் செலவு வேறுபடுமென்பதால் கடிதம் மூலம் தொடர்பு கொண்டு குறிப்பான தொகையை அறியவும்.



படிப்பகம்

www.padippakam.com

பார்த்து, முன்னைப் போல பொருளாதாரமும், ஊர்க்காரர்களின் உறவும் இல்லாததை எண்ணியே புலம்புகிறாள்.

துணி எடுக்கப் போகும் மேரியை, காலனியின் சடையன் பலவந்தமாகப் பிடித்துக் கற்பழிக்கும் போது, தனது செல்வாக்கைச் சுட்டிக்காட்ட எந்தப் பற்றுதலும் இல்லாமல், 'நான் வண்ணாத்தி சாமி' என்று இழிவைச் சொல்லி இரைஞ்சும் அவலம் இக் கொடுரமான சமூக அமைப்பின் யோக்யதையை நம் முகத்தில் அறைந்து சொல்லுகிறது.

கதை குறிப்பாக பறைவண்ணார்களைப் பற்றியதுதான். ஆனாலும், கதையின் ஊடே குடியானவத் தெரு வண்ணாரின் சோகத்தையும், சக்கிலியக்குடிப் பெரியானின் நொடித்து வரும் வாழ்நிலையையும் காண முடிகிறது. இவர்கள் கிராமத்தில் உழலும் கோவேறு கழுதைகள் என்றால், சின்னசேலம் போன சகாய மேரியும், ஜோசப்பும், மெட்ராசுக்கு ஓடிப்போன பீட்டரும் இந்த இழிவைச் சுமக்க விரும்பாத நகரத்துக் கூலிகள். இந்தச் செய்தியைக் கதையின் ஊடாக இயல்பாக உணரவைப்பதில் வெற்றி பெறுகிறது கோவேறு கழுதைகள்' புதினம்.

கதை முடிந்தாலும், பிரச்சினை தொடர்கிறது. சாதிய ஒடுக்குமுறையின் கொடூரத்தையும், உருத்தெரியாமல் சூன்யமாய்ப் போகும் சனங்களின் அவலமான வாழ்வையும், சக மனிதனின் பரிவுணர்ச்சியுடன் நெருக்கமாக வாசகரை இழுத்துச் செல்லும் புதினத்தின் போக்கையும் விரித்துக் கூறாமல் ரசனை என்ற அளவில் மாத்திரம் வரம்பிட்டு, உன்னதம், எதார்த்தச் சிறப்பு என்று மூட்டை கட்டி இலக்கியப் பரணிலேற்றப் பார்க்கின்றன சிற்றிதழ்களும், பத்திரிக்கைகளும்.

நந்தனோ, ஏகலைவனோ இன்று நம்முடன் வந்திருக்கும் ஆரோக்கியமோ எழுத்தாக இருக்கும் வரைக்கும்தான் இவர்களுக்கு கலை. எழுந்து வந்து நியாயம் கேட்கும்படி நேரிட்டால், பிரச்சாரம், இலக்கிய அபச்சாரம் என்பதே இந்த கலைஇலக்கியவாதிகளின் கண்ணோட்டம், இதை உறுதிப்படுத்தும் வகையில் ''கோவேறு கழுதைகள்'' புதினத்தைப் பற்றி இந்தியா டுடே (ஜனவரி 6-20, 1995) யில் வந்திருக்கும் விமர்சனத்தைக் கூறலாம். இக்கதை அனுபவம் இந்தியா டுடே (எம். வேதசகாயகுமார்)-வுக்கு இலக்கிய வாசிப்பாக மட்டும் ஆவது தெரிந்த கதை. ஆனால் 'கோவேறு கழுதைகள்' பற்றிய இலக்கிய வாசிப்பு ஒரு இனிய அனுபவமானதாம் அவருக்கு. இதைத்தான்' நம்மால், ஏன் யாராலும் சகித்துக் கொள்ள முடியாது. சவுரியின் பொதி சுமக்கும் உளறலும், ஆரோக்கியத்தின் ராச்சோறு புலம்பலும் காணும் யாருக்கும் நிச்சயம் இனிய அனுபவமாகாது. அது கொடூரமான வாழ்வின் நேர் முகம். உப்பரிகையிலிருந்து வேடிக்கை பார்ப்பவனுக்கு ஊர்வலத்தின் அழகும், ரசனையுந்தான் தேவை. வடம்பிடிப்பவனுக்கல்லவா வலியும், வருத்தமும் தெரியும்.

இந்த வலியையும், வருத்தத்தையும் ஆசிரியரின் கூற்றாக இமையம் பல இடங்களில் கோடிட்டுக் காட்டுகிறார். எழுத்தாளனின் இவ்வுடன்பாட்டையும், சமூகப்பொறுப்பையும் வலியுறுத்த விரும்பாத இந்தியா டுடே விமர்சகரோ ''சமகால அரசியலின் தந்திரங்களிலிருந்து இமையம் கலைஞனாக விலகியே நிற்கிறார்'' என அவரை இலக்கிய முனிவராக்கி காட்டுக்கனுப்புகிறார்.

அவர்களின் அளவுகோலில் எழுத்தாளன் சமகாலப் பிரச்சினையிலிருந்து விலகிநின்றால் இமையம். ஒன்று கலந்தால் வெறும் 'தொரப்பாட்டுக் கல்'. இதே போலத்தான் கதையின் பாத்திரப் படைப்பைக் கூறும்போதும். ஆரோக்கியத்தை வெறும் புனிதமான அம்மாவாக வெளிக் காட்டுகிறது இவர்களது விலகல்புத்தி.

> **தமிழின் விரல்விட்டு எண்ணக்கூடிய நாவல்களில் இதுவும் ஒன்றாம் - இந்தியா டுடே... சொல்கிறது. மற்றவை எவையெனச் சொல்லியிருந்தால் இவர்களின் இலக்கிச் சாயம் வெளுத்திருக்கும். நேற்றுவரை 'கலை கலைக்காகவே' என்று விரதமிருந்தவர்கள், மனிதர்களுக்காக குரல் கொடுக்கும் 'கோவேறு கழுதைகளுக்கு' இன்று 'ஞானஸ்நானம்' செய்ய வந்திருப்பதன் 'செய்தி'யை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.**

'பற வண்ணாத்தி' என்ற வசவுகளோடு, வாழ்வதற்காக நிலைகுலைந்து அல்லாடும் ஆரோக்கியம் சாதி ஒடுக்குமுறைக்குள் பிணைக்கப்பட்ட ஒரு தலைமுறையின் பிரதிநிதி. இந்தியா டுடேயின் விமர்சகரோ ''ஆரோக்கியம் கோட்பாடுகளைச் சுமந்து தீர்க்கும் படி விதிக்கப்பட்டவளல்ல, அவள் அடிப்படையில் ஒரு தாய்'', என தூசு தட்டுகிறார்.

அடக்குமுறைகளின் கோட்பாடுகளை ஆரோக்கியம் சுமந்து திரிவதைப் பற்றி கலைப் புனிதவாதிகளுக்கு கவலை இல்லை. ஒரு வேளை ஆரோக்கியமே இச்சூழலிலிருந்து விடுபடுவதற்கான வேறு முடிவுகளுக்கு வந்திருந்தால் எதார்த்த மீறலாக கருதி இந்தியா டுடேயின் இலக்கியத் தாய்மை கிடைக்காமல் போயிருக்கும் ஆரோக்கியத்திற்கு.

கதையின் பல இடங்களில் ஆரோக்கியம் தன் வாழ்வின் அவலத்தை பாடலாக, ஒப்பாரியாக, ஏன் கணவன் சவுரியிடம் சண்டையாகவும் தீர்த்துக் கொள்கிறாள். 'எம் பொறப்பே இப்படியாச்சே' என நொந்து கொள்கிறாள். இது இச்சமூக ஒடுக்குமுறையின் கொடூரத்தை வாசகருக்கு இனங்காட்டுபவை. இந்தக் கண்ணோட்டத்தைக் கழுவிவிட்டு தன் பெண்டு, தன் பிள்ளை நலம் காக்க 'போஷாக்கு' தேடும் வெறும் காம்ப்ளான் அம்மா அல்ல ஆரோக்கியம்; ஒடுக்குமுறைக்குள்ளான கீழ்சாதி சமூகத்தின் மொத்த உருவே ஆரோக்கியம்.

தமிழின் விரல் விட்டு எண்ணத்தக்க நாவல்களில் இதுவும் ஒன்றாம். வரிசையில் மீதி இருப்பவை எவையென்று சொல்லியிருந்தால் இவர்களின் இலக்கியச் சாயம் வெளுத்திருக்கும். நேற்றுவரை கலை, கலைக்காகவே என்று விரதமிருந்தவர்கள், மனிதர்களுக்காக குரல் கொடுக்கும் 'கோவேறு கழுதைகளுக்கு' 'ஞானஸ்நானம்' செய்ய வந்திருப்பதன் 'செய்தி'யை நாம் தெரிந்து கொண்டாக வேண்டும்.

அறுபத்தி ஏழில் வெண்மணிச் சம்பவமும், எழுபதுகளில் நடந்த விவசாயப் போராட்டங்களும், இன்னும் தாழ்த்தப்பட்டவர்களும், வண்ணார்களும், கூலி உழைப்பாளர்களும் சங்கமாய், அமைப்பாய்த் திரண்டு தன் நியாயத்தை பாட்டாய், பேச்சாய், கலகமாய் வீதிகளில் நிகழ்த்தும் போதெல்லாம் இது பிரச்சாரம், அரசியல் நெடி என்று ஒதுக்கித்தள்ளும் இந்த 'உன்னத இலக்கியவாதிகள்' காலத்தின் கட்டாயத்தினால் ஒடுக்கப்பட்டவர்களின் உணர்ச்சி வெடிப்புகளையும், படைப்பாயுதங்களையும், தன் நிறுவன அலமாரிக்குள் அடுக்கிக் கொள்ள எத்தனிக்கிறார்கள்.

''வேணுங்குறப்ப அழச்சு ்வேல வாங்குன சனம், இப்ப எட்டிக் கூட பாக்குறதில்ல', எனத் தனிமையில் புலம்பி காறித்துப்பும் ஆரோக்கியத்தின் எச்சில் இவர்களுக்கும் சேர்த்துத்தான். ஒடுக்கப்பட்ட சனங்களின் உணர்வுகள் இந்தியா டுடேவோ, கலைப் புனிதவாதிகளோ சொல்லுவது போல தமிழில் 'புதுச்சரக்காய்' இருக்கலாம் ஆனால் அவை தமிழகத்தில் தழும்பேறிய அனுபவங்கள். அவர்களுக்கு இது புதிய வரவு. நம்மைப் பொறுத்தவரை இது உணர்ச்சி மரத்துப் போன சமூகத்தின் மீது வைக்கப்பட்ட இன்னொரு சூடு.

—சித்தன்

**'கோவேறு கழுதைகள்'**
**இமையம்**
க்ரியா வெளியீடு - விலை ரூ. 60
கீழைக்காற்று விற்பனையகத்தில் கிடைக்கும்

அசிரியரும் வெளியிடுபவரும்: வி.வல்லபேசன், 22, சாமியார் தோட்டம், ஆலந்தூர் சாலை, சாலை சைதாப்பேட்டை, சென்னை-600 018
அச்சிடுபவர்: வி.கே.சாமி, பிரேம் பிரஸ், 107-ஏ, பெரியார் பாதை (மேற்கு), சென்னை-600 094

புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் உண்மைகளே!

படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA KALACHARAM R.N.42647/87 REGD.NO.TN/MS(S) 637



# கண்ணீர் விட வேண்டாம்

கண்டோபா,
எல்லம்மா,
சாந்த துர்கா.[1]

கேட்கின்ற கடவுளரின்
பலிபீடத்தில்,
எங்கள் குழந்தைகளை
மறுக்காமல் படைக்கின்றோம்.

கேட்கின்ற
ஆண்களுக்கு
கசங்குகின்ற பாயாக,
விரிக்கின்றோம்
எங்கள் பெண்களை.

அம்மாவைப் புணருகின்ற,
சதைப்பிண்டங்கள் நாங்கள்.
ஊமை விலங்குகள்.
நினைத்துப் பார்க்க
வாழ்க்கை
என்று ஏதுமில்லை.

என்ன இருந்தாலும்
தவறுதான்
என்பீர்கள்
எங்களுக்கும்
புரிந்ததுதான்.

முன்னோர்கள்
செய்தார்கள்
இன்று நாங்கள் -
நாளை
எங்கள் குழந்தைகள்
வாழையடி வாழையாக.

அன்று
கூர்முனை வாளால்
சம்புகனை
வெட்டிக் கொன்றான்
ராமன்.
ராமராஜ்யம்
கண்களை
மூடிக் கொண்டோம்
இன்று வரை
திறக்கவில்லை.

மன்றாடுகிறோம்
கெஞ்சுகிறோம்
உங்களை
கையெடுத்துக் கும்பிடுகிறோம்
கண்ணீர் விட வேண்டாம்
கருணை
காட்டவும் வேண்டாம்

வாழ்க்கை அழுக்கின்
வீச்சம் குமட்டும்
எங்கள் கந்தைகளை
நீங்களொன்றும்
அலசிப் பிழிய வேண்டாம்
ஆண்டுக்கொருமுறை.

ஆம்.
பல நூற்றாண்டுகளாய்
இந்த உலகம்
பார்த்துப் பழகியதுதான்
எங்கள் அம்மணம்.

வேண்டாம்
மீண்டும் ஒரு முறை
உருவாதீர்கள்
எங்கள் ஆடைகளை -

இந்த உலகின் முன்.

— அனுராதா குரவ்

குறிப்பு: 1 கர்நாடக மாநிலத்தின் தாசி குலத்தினரின் குல தெய்வங்கள். இந்தக் கடவுள்களின் கோயிலில்தான் பொட்டுக்கட்டும் சடங்கு நடக்கும்.

'பெண் கவிஞர்களின் புதிய குரல்', என்ற கவிதை நூலில் உள்ள கவிதையை ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்து வெளியிடுகிறோம். கவிதை அனுப்பியவர் - வாசகர் பாரி செழியன், குட்டி மேக்கி பட்டி.

படிப்பகம்